தொண்டன்

V 6 No. 20 18 My 1933

3Ç

ஜ211, N28K4

N33.6.20.

189128

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

13 JUL 1933

Vol 6.] 1933 ஹு மே மீ 18உ [No. 20

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 381
2. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம், BA.BL. 383
3. யாப்பிலக்கணம் (வஞ்சிப்பா-மருட்பா) வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 385
4. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 386
5. தமிழ்ப் பாடம் நளவெண்பா-கலிநீங்குகாண்டம் 388
6. தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள் N. R. சேஷாசாரி 390
7. பொதிகை நிகண்டு (சு, செ, சே, சை, சொ, சோ) S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 391
8. நம்மாழ்வார் வைபவர் (5-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 392
9. காற்று மழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's Tempest 394
10. திருக்குறள் நீதி (கற்பியல்) A. இராமலிங்கம் 395
11. வர்த்தமானம் 399

கலாநிலயம்

189(1)8

புடவைப் பூசல்.

மனத்தாலன்றி, சமயத்தால் சாதியால் வழக்கங்களால் மற்றோர் மொழியினால் மனிதர் தம்முள் மாறுபடுகின்றார்கள் என்னும் ஓர் பொய்ம்மையை மெய்யென நினைத்து மாநுட வாழ்க்கையைச் சீர்செய்ய முயல்கின்ற இம்முயற்சி யெல்லாம் வீணாவதுடன், முன்னே சற்று நன்றாயிருந்தவைகளையும் கெடுத்துவிடும் என்னும் இச் சிறு செய்தியைத் தெரிந்துகொள்ளமாட்டாமல் விவகரிக்கின்ற பெரிய மனிதர்கள் என்னநினைத்து என்னசெய்கின்றார்கள் என்பதை யெண்ணவெண்ண விந்தையே விஞ்சுகின்றது. எத்தனைமுறை நாம் இதனைச் சொல்லியிருக்கின்றோமாயினும் அத்தனைமுறைக்கு மேலும் ஒரு முறை சொல்லவேண்டி நிற்கின்ற செய்திகளில் இது வொன்று. ஒருவரை ஒருவர் நலிகின்றாரெனின், நலிவோர் நலியப் பெறுவோர் ஆகிய இருதிறத்தோரும் மாசுடைய மனத்தினரா யிருக்கின்ற இவ்வொரு ஒற்றுமையே காரணமாகுமன்றி, அவர்க்கிடையே கிடக்கின்றதெனக் கருதப்படும் எவ்வகை வேற்றுமையும் காரணமாகமாட்டாது. நற்றவ முனிவர்களைப்புலிகளும் நலிவதில்லை என்பதை யாவரும் அறிவார். பண்ணடைவில்லா மனத்தினின்று பிறக்கும் அவா அழுக்காறு அகந்தை வெகுளி முதலியவைகளாற்றானே ஒருவர் பிறருக்குத் தீங்கு செய்கின்றாராதலின், இத் தீங்கு விளைவதற்குக் களனாயிருப்பது கசடுடைய மனமேயன்றி மானுடவாழ்க்கையில் பயில்கின்ற எவ்வகைப் பழக்கமுமன்று, ஒழுக்கமுமன்று, மதமுமன்று, சாதியுமன்று, செல்வத்தின் மிகுதியுமன்று குறைவுமன்று — மனத்திற்கயலாயிருப்பது ஒன்றுமன்று. ஒரே சாதியினர் ஒரே மதத்தினர் ஒரே மொழியினர், ஒரே குடியினர், உறவினர், ஒரு வயிற்றிற் பிறந்தவர் ஒருவர்க்கொருவர் இன்று செய்துகொள்ளும் கொடுமையினளவு அவர் வேறு சாதி மதம் மொழியினர்க்குச் செய்ய நேர்வதில்லை என்றே எண்ணுதல் வேண்டும். செல்வவந்தர் பெரிய உத்தியோகத்திலுமிருப்பவர் ஒருவர் தம் புதல்வியின் கலியாணத்தில் தம் தங்கைக்குப் புடவை வாங்கித்தரவில்லை என்ற காரணத்தால், அவ்வம்மையார் மணமனையில் விருந்திற்கிசையாது அகன்றுவிட்டார். இதுபற்றிக் குழப்பமும் கலகமும் அம்மணமனை முழுவதும் கதுவி, உவகை பொங்க வேண்டியவோர் செவ்வியில் கவலையே எங்கும் பரவியது. இத்தங்கையின் கணவரும் செல்வவந்தர், உயர்ந்தவோர் உத்தியோகத்தில் இருப்பவர். இருதிறத்தோர்க்கும் ஐம்பதுரூபாய்ப் புடவை ஒருபெரிய காரியமன்று. ஆயினும் அதனை விழைகின்ற தங்கைக்குக் கொடுத்துத் தாமும் உவந்து அவளையும் உவப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்ற மறுக்கின்றது. இத்தங்கைதான், தமையன் குறிப்பறிந்து, "எனக்குப் புடவைகள் மிகுதியும் உள, ஆதலால் எனக்குப் புடவை வாங்கி அண்ணா, நீ வீணே பணத்தைச் செலவுசெய்யாதே" என்று கூறிக் கருமிக்குரிய மகிழ்வை அவருக்கு அளிக்க மறுக்கின்றாள்—இதனால் விளைவது கலகமன்றி வேறொன்றுமில்லை. இவ் வண்ணனும் தங்கையும் தம் தமிழ்மொழி மறந்து ஹிந்தியிலேயே பேசிக்கொள்பவர்களாயின் இது நேர்ந்திராதோ? வேறு வேறு

சாதியினர்களோ இவர்? இருவரும் வழிபடும் கடவுள்களும் வேறு வேறோ? எக்கடவுளையேனும் இவர் வழிபடுபவர்களாயிருப்பாராயின், இது நேர்ந்திராதே. இவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவரும் மற்றவர் தாழ்த்தப்படாதவராயு மிருக்கின்றாரோ? உண்மையில் இருவரும் மனத்தால் தம்மைத் தாழ்த்திக்கொண்டிருப்பதா லன்றோ இப்பூசல் நேர்கின்றது. இப் புடவைப்பூசல் மிகச்சிறிய செய்தி; எனினும் இப் பதினெட்டுமுழப் புடவையைக் கொண்டு புவியில் நிகழ்கின்ற அனைத்துப் பூசல்களையும் அளந்து மனத்திற்குள் மடித்துவைத்து விடலாமே.

மனத்தைக் கெடுத்துக்கொண்டிருப்பவர் கெட்டவர்களாவதைமறந்து அக்கேட்டின் பழியை, சாதி மதம் மொழி பண்டைக்காலப் பழக்கவழக்கங்கள் முதலியவைகளின் தலையில் வீணே சுமத்தப் புகுவதே தற்காலத்தின் மாபாவித்திரிகின்றது. இதற்கே மனிதர் இப்பொழுது அடிமைகளாகிக் கிடக்கின்றனர் என்பதை அறிவாளிகளல்லாமல் ஏனையோர் எங்ஙனம் அறியவல்லார். "தற்காலம் தற்காலம்" என்பதனினும் அடக்கரிய பெரும்பேய் எழுப்பலரிது. கில்பர்ட் முர்றே என்பவர் கூறுகின்றார்—

It is never really the past—the true past—that enslaves us; it is always the present. It is not the conventions of the seventeenth or eighteenth century that now make men conventional. It is the conventions of our own age; what one always needs for freedom is some sort of escape from the thing that now holds him. A man who is the slave of theories must get outside them and see facts; a man who is the slave of his own desires and prejudices must widen the range of his experience and imagination. But the thing that enslaves us most, narrows the range of our thought, cramps our capacities, and lowers our standards is the mere Present—the present that is all round us, accepted and taken for granted, as we in London accept the grit in the air and the dirt on our hands and faces. The material present, the thing that is omnipotent over us, not because it is either good or evil, but just because it happens to be here, is the great jailer and imprisoner of man's mind; and the only true method of escape from him is the contemplation of things that are not present.

ஆதலின், அறிவுடையோர் ஒருவரும், சாதி மத மொழி பழக்க வழக்கங்களின் வேறுபாட்டினால் நாம் மாறுபட இகலி நிற்கின்றோம் என்றும், இவை க[illegible]ரியுமாயின் அப்புறம் எல்லாவற்றிலும் சகோதர பான்மை.. தலைசிறந்து தோன்றுமென்றும் பேசிப்பேசிப் பேதைப் [illegible]குழியில் விழுகின்ற தற்கால மரபிற்கு நம்மை அடிமையாக்கிக்கொள்கின்ற கொடுமையிலும் கொடுமையாதெனின், இதனையே தலை என்று அழைக்கின்ற பரிபவமேயாம். சாதிமத மொழிவேற்றுமைகளோ நம்மை இகல்கொள்ளப் பிரித்துவைக்கின்றன என்பதை மிகவும் எளியதோர் வகையிற் சோதித் துணர்ந்துகொள்ள இயலுமே. ஐரோப்பாவைப் பார்க்கப்படாதா? அங்கு வேற்றுமை என்ற பேருடைய இவ்வகையிடையூறுகள் இல்லையே. எத்துணை ஒற்றுமை, எத்துணைச் சகோதரத்வம் அவர்களிடையே கைவந்திருக்கின்றது? முன் சொன்ன கில்பர்ட் முர்றே என்பவர் ஓர் பிரசங்கத்தில், "நாமெல்லாரும் சகோதரர்களா யிருக்கின்றோம்" என்று உரைக்குமளவில், உடனே,

"If any one thinks my word, "brotherhood" too strong in the present state of Europe, I would remind him of the relationship between Cain and Abel"

[ஐரோப்பாவின் தற்கால நிலைமைக்கு, நான் "சகோதரத்வம்" என்றுரைத்த சொல் சற்றேனும் பொருந்தாதென்று இங்கு இருப்பவர் யாரேனும் கருதுவாராயின், கேய்ன் ஆபெல் என்னும் அவ்விருவருக்கும் இருந்த உறவினை நினைத்துக்கொள்ளும்படி வேண்டுகின்றேன். (இவ்விருவரும் ஆதித் தந்தை ஆதாமின் புத்திரர்கள்; கேய்ன் என்பவன் தன் சகோதரன் ஆபெல்லைக் கொன்று விட, கடவுள் கேய்ன் முன்தோன்றி, "உன் தம்பிஆபெல் எங்குளன்" என்று கேட்டபோது, "நான் என் தம்பியின் பாது காப்பாளன் (Guardian) அல்லன்" எனப் பதிலுரைத்தது பழைய ஏற்பாட்டுக் கதை]

எனத் தன்னைத் திருத்திக்கொள்வது அவசியமாயிற்றென்றால் வேறென்ன விளம்புதல் வேண்டும்.

எனின், நமக்குப் பகையாயிருப்பன, முன்னுரைத்த வேற்றுமைகளல்ல. மற்றுயாதெனின், கில்பர்ட் முர்றே என்னும் அவ் வாங்கில அறிஞரே கூறட்டும்.-

"If we fret and argue and fight one another now, it is mainly because we are so much under the power of the enemy. The enemy has no definite name, though in a certain degree we all know him. He who puts always the body before the spirit, the dead before the living; who makes things only in order to sell them; who has forgotten that there is such a thing as truth, and measures by advertisement or money; who daily defiles the beauty that surrounds him and makes vulgar the tragedy; whose innermost religion is the worship of the Lie in his Soul. The philistine, the vulgarian, the great sophist, the passer of base coin for true, he is all about us, and, worse, he has his outposts inside us, persecuting our peace, spoiling our sight, confusing our values, making a man's self greater than the race and the present thing more important than the eternal,"

இந்தச் சத்துருவினின்று தப்புவதற்கு வழியொன்றே. வித்தகர் மொழிகளும் கவிவார் கலைகளுமே மனிதரை இந்நாள் காக்கவந் துதவவேண்டும். கல்லாத பேர்களெல்லாங் கோட்டிகொண்டு குழறுகின்ற பழுதுடைச் சொற்களைப் பறித்தகற்றி, வித்தகர் வழங்கியுள விழுமிய மொழிகளை விழைந்தேற்று அவ்வழி ஒழுகும்படி நம் மனத்தினைப் பண்படுத்தி வைப்பதற்கு இன்றியமையாதது, கலையுணர்வு கைவந்து அதனால் உலகினை உற்றுநோக்கிக் காண்கின்றவோர் கலக்கமில்லாக் காட்சியாம். இக்காட்சியிருந்தாலன்றி இப்பிரபஞ்ச மடங்கலும் எம்மை யாளுடைய பெருமானது திருவிளையாடல்களாவது தோன்றாது. "அலகிலா விளையாட்டுடையார் அவர்" என்ன வல்லவ் கம்பர் போன்றவர்களே. அவ்விளையாட்டிற்றான் நம்முடைய வாழ்வு அமைந்திருக்கின்றது. அத்திருவிளையாடலை அறியோமெனின் நம்முடைய வாழ்க்கையனைத்துந் தெருவிளையாட்டாய்த் தீர்ந்துவிடும். விளையாட்டை வாழ்க்கையென்பது வேறு; வாழ்க்கையை விளையாட்டாக்குவது வேறு. முன்னது புடவைப்பூசல், பின்னது விருந்தினர் முகங்கண்டு அன்னவிழாவணி விரும்பிச்செய்யும் அமலை.

விரைவில் நேராகும் என நம்பி, பத்திரிகை சிறிது காலந் [illegible]தை நமது நண்பர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றோம். [illegible]

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[351-வது பக்கத் தொடர்ச்சி]

கயவரு முயரிய கழறல் கூடுமே.

அறம்போன் றறமல்லாமல் இருப்பன பலப்பல; மாரீசன் இங்கு இராவணனுக் கறிவுறுத்தும் அமைதியும் அவைகளிலொன்று. மாதுலன் இசைப்பன யாவும், அவைதம் அளவில் ஈறில் நல்லறங்களேயாயினும், இவன் அறமே நோக்கி அறத்தை எடுத்தியம்பி வற்புறுத்துமொரு செம்மையனாய் நிற்கின்றானென்பதற் கில்லை.

தானோர் அமைச்சன் என்னும் முறைமையில் மாரீசன் உறுதிமொழிகள் உற்றுரைக்க அது கேளாமல் வெகுள்கின்றான் இராவணன் ஆயினும், மாரீசன்,

தன்னைமுனி வுற்றதறு கட்டகவி லோனைப்
பின்னைமுனி வுற்றிடு மெனத்தவிர்த்தல் பேணா
துன்னைமுனி வுற்றனை குலத்தைமுனி வுற்றா
யென்னைமுனி வுற்றிலையி தென்னென விசைத்தான்

[தன்னைக் கோபித்த அந்த அஞ்சாமையுடையவனும் நடுநிலைமை இல்லாதவனும் ஆகிய இராவணனை, பின்னும் தன்னை கோபிப்பான் என்று அஞ்சி அவனுக்கு இன்னும் சில சொல்லாமல் விட்டுவிட விரும்பாமல், "என்னை நீ கோபிப்பதாகிய இது, உண்மையில் என்னைக் கோபித்து ஒன்றும் செய்த படியாகாது; மற்று, உன்னையே கோபித்து உனக்கும் உன்குலத்தவர்க்கும் கேடு சூழ்கின்ற பகைவனேயாகின்றாய், என்ன இது," என்று ஏசி மேலுஞ் சொல்வான்]

எனினும், முன் சொல்லாதது இன்னும் சொல்வதற்கென்னுளது. இராவணன்றன் எளிமையையும் இராமனது மேன்மையையும் மீண்டும் வற்புறுத்துவானாகி, முதலில், கைலையங்கிரியைக் கையி லெடுத்தவனெனுமொரு இராவணன் இறுமாப்பைச் சிதைக்கும் வண்ணம்,

எடுத்தமலை யேநினையி னீசனிகல் வில்லாய்
வடித்தமலை யேயிது வலித்தியென வாரிப்
பிடித்தமலை நாணிடை பிடித்தொருவன் மேனாள்
ஒடித்தமலை யும்பர்முக டுற்றமலை யன்றோ

[நீ பெயர்த்தெடுத்த கைலாயமலையையே நினைத்துப் பெருமைபாராட்டிக்கொண்டிருப்பதால் என்ன பயன்! "சிவபிரான் திரிபுரங்களை யழிக்க வில்லாக வளைத்த மேருமலையே போன்றது இவ்வில், இதனை வளைத்திடுவாய்" என்று ஜனகன் முதலானோர் சொல்ல, முன்னாள் இராமனாகிய ஒருவன், எளிதில் எடுத்ததும் பிடித்ததும் நாணியின் இடையில் ஒடித்ததும் ஆகிய அவ்வொரு வில்லாகிய மலை ஆகாயமுகட்டை அளாவியுள்ள மேரு மலையே யன்றோ - அதனை என் மறக்கின்றாய்]

என்றனன். இதற்கு இராவணன் இங்கு எதிர்விளம்புவதின்றிப் பின்னர் இலங்கையில் வீடணன் இவ்வண்ணமே அறிவுறுத்தியநாள், "வனவில் இறுத்தவனும் ஒரு வீரனோ" என்று பழுதுரைப்பான் இவன். இவ்வாறே, இச்செயலை, "புரையோடிய சிலையின் திற மறிவேன்" என்று இகழ்ந்துவந்தவனும்,வில்லிரண்டினும். உயர்ந்தவில்லதனை ஏந்தியவனுமாகிய பரசுராமனையும் இராகவன் வெற்றிகொண்ட செய்தியை இங்கு,

ஆயிர மடற்கையுடை யானைமழு வாளால்
ஏயெனு மிமைப்பினுயிர் செற்றவெதி ரில்லோன்
மேயவிறன் முற்றுவரி வெஞ்சிலையி னோடுந்
தாயகன் வலித்தகைமை யாமுறு தகைத்தோ

[வலிமை வாய்ந்த ஆயிரம் கைகளையுடைய கார்த்தவீர்யார்ச்சுனனை மழுவாயுதத்தால், ஏ என்று கூறும் பொழுதிற்குள்ளே மிக விரைந்து உயிர் அழித்த நிகரற்ற பரசுராமனிடத்தில் இருந்த வலிமை முழுவதையும் கட்டமைந்த அவன் கொடிய வில்லினுடனே தனக்கு உரிமையாக்கிக்கொண்ட இராமனது வலியின் மேன்மையானது நாம் அடையும் தன்மையதோ]

என்று மாரீசனே இசைத்துவிடுகின்றானாதலின், இராவணனது வாய்கள் அத்திறத்தில் அடங்கிவிடலாயின. மேலும், "உன்னை வென்ற கார்த்தவீர்யார்ச்சுனனை வென்ற பரசுராமனை வென்றவன் இவ்விராகவன்" என்று மேன்மேல் நவில்கின்ற நினைவு இக்கட்டுரையில் அடங்கி யிருத்தலால், இராவணனது பத்துத் தொண்டைகளும் பரிபவத்தால் அடைத்துக்கொண்டிருத்தல் வேண்டும். இதனையே வீடணன் பிற்றைநாள் வெளிப்படையாக,

எயது பிறிதுணர்ந் தியம்ப வேண்டுமோ
நீயொரு தனியுல கேழு நீந்துவாய்
ஆயிரந் தோளவற் காற்ற றோற்றனை
மேயிலை யாமெனின் விளம்ப வேண்டுமோ

[தக்கதென்று இன்னுஞ் சில நினைத்துச் சொல்ல வேண்டுமோ! "எனக்கு நிகரில்லை என்று செருக்கி நீ இவ்வேழு உலகங்களிலும் நீந்துவாயாயினும், ஆயிரந் தோள்களையுடைய கார்த்தவீர்யார்ச்சுனனுக்கு வலியழிந்தனையே யல்லாது எதிர் நீ நிற்கவில்லையென்றால் வேறென்ன விளம்ப வேண்டுமோ]

எனச் சாற்றியதற்கும் எதிருரைக்கமாட்டாமல் இராவணன் நின்றானேனும், இற்றைக்கும் அற்றைக்கும் இடையே நிகழ்ந்த வாலிவதையைக் குறித்து விபீடணன்,

மேலுயர் கயிலையை வென்ற மேலைநா
ளாலுதோ ணந்திதா னவின்ற சாபத்தாற்
கூலவான் குரங்கினாற் குறுகுங் கோளது
வாலிபாற் கண்டனம் வரம்பி லாற்றலாய்

[எல்லையற்ற ஆற்றலுடையவனே, மிகவும் உயர்ந்த கயிலைமலையை நீபெயர்த்த அந்நாள்,தொங்குகின்றதோள்களையுடைய நந்தி இட்ட சாபத்தின்படி வாலுடைய சிறந்தகுரங்கினால் நேர்ந்த இடையூற்றை வாலியினிடத்தில் கண்டோம்]

ஏனக் கூறியபோது, இராவணன் இதற்குஉரைகுறையாமல் எதிராக,

அரங்கி னாடுவாற் கன்புபூண் டுடைவர மறியே
னிரங்கி யானிற்ப வென்வலி யவன்வயி னெய்த [ள
வரங்கொள் வாலிபாற் றோற்றனென் மற்றும்வே றுள்
குரங்கெலா மென்னைவெல்லு மென்றெங்ஙனங்கோடி

[அரங்கில் ஆடுகின்ற சிவபிரான்பால் பக்திசெய்து வாலி பெற்றிருக்கின்ற வரத்தின் உண்மையை அறியாமல் யான் ஆரவாரம் செய்து எதிர்நிற்க, என்வலிமை அவன்பால் சேர்ந்துவிடவே, இத்தகைய வொரு வரமு

டைய வாலியினிடத்தில் தோற்கலானேன், அது கொண்டே, எல்லாக் குரங்குகளும் என்னை வென்றுவிடவல்லன் என்று நீ எங்ஙனம் எண்ணுகின்றாய்]

எனத் தம்பிக்கு விளக்கியதன்றியும், வாலியைக் கொன்ற வீரன் இராமனென்றும் உரைக்க வொண்ணாதென மீண்டும்,

நீல கண்டனு நேமியு நேர்நின்று நேரின்
னேனு மன்னவ ருடைவலி யவன்வயி னெய்துஞ்
சால நல்வர நினைந்தவ னெதிர்செல றவிர்ந்து
வாலி தன்னையு மனிதனு மறைந்துநின் றெய்தான்

[சிவபிரானும் திருமாலும் நேர் நின்று எதிர்த்தால், பொருந்திய அவர்களுடைய வலிமையும் அவ்வாலியின் பாற் சேரும். இந்த நல்ல வரத்தை நன்றாக நினைவிற் கொண்டு வாலிக்கு எதிர்செல்வதைத் தவிர்த்து மனிதனாகிய இவ்விராமனும் மறைந்து நின்றே அம்பையெய்தான்] என்றுரைத்து, தன் அறிவிற்கும் தன்மைக்கும் எட்டியவாறு, வாலியை ஏசிச் சொல்லாததோர் காரணத்தையுங் காட்டுகின்றான்.

இவ்வண்ணம் இராமனது கடக்கரிய பேராற்றலை எடுத்துப் பேசுவதுடன் சீதையின் தன்மையையும் அறிவுறுத்தி இராவணனது தீய எண்ணத்தை மாற்றுதற்கு முயன்ற மாரீசன்,

யாதுமறி யாயுரைகொ ளாயிகலி ராமன்
கோதைபுனை யாமுனுயிர் கொள்ளைபடு மன்றே
பேதைமதி யாலிஃதோர் பெண்ணுருவ மென்றாய்
சீதையுரு வோநிருதர் தீவினைய தன்றே

[நீயும் ஒன்றும் அறியாய், நான் சொல்வதையுங் கேட்கமாட்டாய். பராக்கிரமம் பொருந்திய இராமன் தன் வில்லில் நாணியைப் பூட்டுவதற்குமுன் உன் உயிர் கொள்ளை போய்விடுமே. உன் அறிவின்மையால் இதனை ஓர் பெண்ணின் உருவம் என்று எண்ணிக்கொண்டாய். சீதையின் உருவமோ, அது! அன்று அன்று, அரக்கர்கள் செய்த பாவங்களின் வடிவம் அன்றோ அது.]

என்று சாற்றினான். அவரவர் செய்த தீவினையேயன்றி வேறொன்றும் ஒருவரையும் அழிப்பதற் காற்றாதாதலின், இராவணனது அழிவிற்குக் காரணமாய் நிற்கின்ற சீதையை அவ்விராவணன் முதலிய அரக்கர் தம் தீவினையின் உருவம் என்று உரைத்ததிற் பிழையில்லை யாயினும்,

மண்ணினும் நல்லள் மலர்கள் கலைமகள் கலையூர்
பெண்ணினும்நல்லள்பெரும்புகழ்ச்சனகியோ நல்லள்

என்ன வசிட்டனால் வியப்பதற்குரியவளாய், மிதிலை மாநகரம் செய்த மாதவத்தால் அங்குவந்து அவதரித்த சீதாபிராட்டியை ஏகதேசமாகவும் தீவினையின் வடிவம் எனச் சாற்றுதற்கு மாரீசனையவோர் புல்லரக்கனுக்கன்றி வாய்வருதல் மிக அருமை. ஆதலின் கவிக்கூற்றாக வருமிடத்துக் கம்பர்,

இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்

என முன்னர், இராவணன் செய்த தீமைகளுக்குக் கூனியின் உருவத்தையே கொடுத்தார். இப்படியே பிற்றைநாள், தன தண்ணனுக்கு நன்மதி நவின்று நின்ற வீடணனும்,

தீயிடைக் குளித்தவத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்தசொன் மறுக்க வல்லமோ
நோயுனக்கி யானென நுவன்று ளாளவள்
ஆயவள் சீதைபண் டமுதிற் றோன்றினாள்

[நாராணனையே மணப்பதற்கு நற்றவம் புரிந்திருந்த வேதவதி என்பாளை நீ பண்டு திக்குவிசயம் செய்தநாள் மோகத்தால் தீண்ட, தெய்வக்கற்பினளாகிய அந்நங்கை நெருப்பில் விழும்போது, "உனக்கும் இலங்கைக்கும் உன்கிளைக்கும் கேடாகத் தோன்றுவேன்" என்று சபித்துச் சொல்லிய சொல்லை நம்மால் தடுக்கக் கூடுமோ. "உனக்கு நானே நோயாக வருகின்றேன்" என்று கூறியிருக்கின்றாள் அவள். பண்டு பாற்கடலில் அமிர்தத்துடன் பிறந்த சீதை என்னும் இவள் அந்த வேதவதியே தான் என்பதை அறியாயோ]

எனக் கழறுமளவில், தீவினையின் உருவம் சீதையென்று மாரீசன் சொன்னசொற்களினும் சிறிது தணிந்து அவளை "நோய்" எனும் நிலையில் நிறுத்துகின்றனன். அதுவும் "உனக்கு நோயாக வருவேன் என்றுரைத்த வேதவதியே இச்சீதை" என்கின்றானதலின் நேராகச்சென்று அது சீதையைச் சார்வதுமில்லை. கும்பகருணனும் இராவணனுக்குப் புத்தி கூறுங்கால், சீதையை, "திட்டியின் விடமன்ன கற்பின் செல்வி" என்பான். ஆயினும் நம்புலவர் தம் கூற்றாய் இராவணனுக்கு ஓர் நோயுறுத்தி உரைக்க நினைக்குங்கால், சீதாபிராட்டியைச் செப்பாமல், சூர்பணகையே,

மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்

என்று கூறுதற்கிசைகின்றவராகின்றார். சீதாபிராட்டியோ ஒருகால் இராவணனுக்கு நோயாயினும் ஆகலாம்; மற்று, அந்நோய்க்கு அவளே மருந்து மாகாமையாற்றான் அத்திட்டிவிடமன்ன கற்பின் செல்வி அவன் செய்த தீவினையி னுருவமென லானாள்.

இன்னணம், அருகுநின்று நஞ்சுநுகர்வாரை இது நன்றெனல் நன்றன்று என்னும் பான்மையில், மாரீசன் இராவணனது வெகுளிக்கும் அஞ்சாமல் பின்னுஞ் சில கூறி, கோசிகன் அமைத்த கடவுட்படைகள் பல கொதிப்போடு இராமன் கை இருப்பதையும் நினைவுறுத்தி, இறுதியில்,

வேதனைசெய் காமவிட மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கைசிதை வன்றே
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேனதனை யெந்தைதவிர் கென்றான்

[வேதனை செய்கின்ற காமமாகிய விஷம் அதிகமாகி நீ வாட்டமடைந்தாய் ஆதலால், தீய இவ்வார்த்தைகளைக் கூறினாய். இத்தகைய காரியம் உன் அழிவிற்குக் காரணமாகும் அன்றோ; உனக்கு மாமனும், உன்குலத்தில் மூத்தவனும் ஆகிய நான் இவைகளைச் சொன்னேன், அப்பா, நீ எண்ணிய தீமையை விட்டுவிடு—என்று கூறினான், மாரீசன்]

இன்னவாறெல்லாம் கழறிய உரைகளால், "தம்முயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்" என்ற இலக்கணத்திற் கிணங்கிய வொரு அமைச்சனே இம்மாரீசன் ஆவான் போல் தோன்றுகின்றான். ஆயினும் தன்னுயிர்க்கு உறுதி எண்ணியே இவன் தலைமகனது வெகுளியைக் கூடியவரையில் தாங்க முயன்ற கயமை இனி வெளிப்படும்.

யாப்பிலக்கணம்

[366-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—வஞ்சிப்பா, மருட்பா

இதுகாறும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் பாக்களுள் முதல் மூன்றனுக்குரிய இலக்கணங்களைக் கற்றோம்; இவ்விதழில் அவை யொழிந்த வஞ்சிப்பா, மருட்பா என்னும்பாக்களுக்குரிய இலக்கணங்களைக்கற்போம்:

வஞ்சிப்பா:—வஞ்சிப்பா என்பது குறளடி வஞ்சிப்பா எனவும், சிந்தடி வஞ்சிப்பா எனவும் இருவகைப்படும். அது தனிச்சொல்லோடு புணர்ந்து, இறுதியில் ஆசிரியச் சுரிதகத்தைப் பெற்று முடியும். வஞ்சிப்பா ஒருபோதும் வெள்ளைச் சுரிதகத்தைப் பெற்று முடியாது. வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமையாம்; எனினும்; ஒருசார் ஆசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்பர். இப்பாவிற்கு அடிப்பெருமை பாடுவோரது பொருள் முடிவின் குறிப்பேயாகும்; வரையறையில்லையென்றறிக.

1. குறளடி வஞ்சிப்பா

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழும் மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

2. சிந்தடி வஞ்சிப்பா

கோடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
புணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் செப்பினோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.

குறளடி வஞ்சிப்பா

சேங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்,
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

(இது மூன்றடியான் வஞ்சிப் பாவிற்குச் சிறுமை வந்த செய்யுள்.)

குறளடி வஞ்சிப்பா

சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர்,
நல்வய லூரன் கேண்மை
அல்லிருங் கூந்தற் கலரா னாவே.

(இஃது இரண்டடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்த செய்யுள்.)

மருட்பா:—புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவி யறிவுறூஉ என்னும் இந்த நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாகவும் ஆசிரியம் இறுதியாகவும் மருண்டு வருவது மருட்பா என்று வழங்கப்படும். இந் நான்கு பொருள்மேலன்றி வேறு பொருள்மேல் மருட்பா வாராதென உணர்க. வெண்பா அடியும் ஆசிரிய அடியும் ஒத்து வருவது சமநிலை மருட்பா என்றும், ஒவ்வாது வருவது வியனிலை மருட்பா என்றும் வழங்கப்படும்.

குறிப்பு:—புறநிலை வாழ்த்தாவது, 'உனது குலதெய்வம் உன்னைப் பாதுகாப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தோடு புதல்வரைப் பெற்று, புதல்வரும் அத்தன்மையராகி, எல்லீரும் நீடு வாழ்வீர்,' என்று தெய்வத்தைப் புறம்நிறுத்தி வாழ்த்துவதாம். கைக்கிளை என்பது, ஒருதலைக் காமத்தைப் பொருந்தியதாம். வாயுறை வாழ்த்து என்பது, முன்னர்க் கைத்தும் துவர்த்தும் பின்னர் நலம் பயக்கும் வேம்பும் கடுவும்போலக் கடுஞ் சொல்லைத் தடையின்றிப் பின்பு நலம் பயக்குமெனக் கருதிப் பாதுகாத்துச் சொல்லும் சொல்லால் மெய்யாக அறிவுறுத்துவது. செவியறிவுறூஉ என்பது, 'பெரியோர்கள் இடையில் வியப்பின்றி அடங்கி வாழ்தல் கடமை,' எனச் சொல்லி, செவிக்கு அறிவுறுத்துவது.

கைக்கிளை மருட்பாவில் இறுதியில் வரும் ஆசிரிய அடிகள் இரண்டேயாகி வந்து, ஈற்றயலடி முச்சீரால் அமையுமென அறிக. புறநிலை வாழ்த்தும் செவியறிவுறூஉம் வாயுறை வாழ்த்தும் மருட்பாவில் மட்டுந்தான் வரவேண்டும் என்னும் நியதி இல்லை; வெண்பாவேயாகவும் ஆசிரியப்பாவேயாகவும் வரவும் பெறும்; கலியும் வஞ்சியுமாக வரப்பெறா. கைக்கிளை எல்லாப் பாவாகவும் வரும்.

1. மருட்பா

தென்ற லிடைபோழ்ந்த தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

(இது புறநிலை வாழ்த்துக் கூறிய வியனிலை மருட்பா.)

2. மருட்பா

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.

(இது கைக்கிளை மருட்பா. இஃது எப்பொழுதும் சமநிலையாகவே வருமென அறிக.

3. மருட்பா

பலமுறை யோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக் கட்டோன்றிச் சுடர்மணித்தே ரூர்
நிலமுறையி னாண்ட நிகரிலார் மாட்டும் [ந்த

சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா
விலங்கு மெறிபடையும் வீரமு மன்பும்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனோ டிவ்வாறி னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
தனைத்தாதல் நீயிருங் காண்டிர் நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீ ரொழுகிற் சென்றுபயன் தருமே.

(இது வாயுறை வாழ்த்துக் கூறிய வியனிலை மருட்பா.)

4. மருட்பா

பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானைத் தேரோடும் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக அடுதிறல்
ஆளி நிமிர்தோள் பெருவழுதி எஞ்ஞான்றும்
ஈர முடைமையாய் என்வாய்ச்சொற் கேட்டி
உடைய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா னிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்;
அமைத்த அரும்பொரு ளாறன்றி வெளவல்;
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருமன்ற மறுக அகழாதி, என்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்ப டேற்க; அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி; ஒட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செகுத்துநிற் சேர்ந்தாரை ஆக்குதி;
அற்ற மறிந்த அறிவினாய்!—மற்றும்
இவையிவை நீயா தொழுகி னிலையாப்
போநகட லாடை நிலமகள்
ஓநதடை நீழற் றுஞ்சுவள் மன்னே."

(இது செவியறிவுறூஉ வியனிலை மருட்பா.)

குறிப்பு:—இம்மருட்பாவுக்கு மற்றப் பாக்களுக்குள்ளது போல இனமில்லை என அறிக.

தேவகி

[368-வது பக்கத் தொடர்ச்சி]

அத்தியாயம் 12.

அன்றுமுதல் என்னப்பனேயான அப் பெரியார்க்குரிய காரியங்களை யெல்லாம் நானே செய்து வந்தேன். காலையுணவு தருவதும் அன்னமிடுவதும், சிற்றுண்டியளிப்பதும், அவர் பூசைக்குரியன சேகரிப்பதுமான வேலைகளை நான் ஏற்றுக்கொண்டேன். ஒருநாள் மாலை அவர் வழக்கம்போல் சிற்றுண்டியேற்கச் சமையலறை வரவில்லை. அவர் வராது போகவே, சிற்றுண்டியை எடுத்துக்கொண்டுநானே அவர் அறையினருகு நெருங்கினேன். அப்பொது " உன்னையும் நான் காணப்பெறுவனோ. எங்குச் சென்று ஏங்கிக் கொண்டிருக்கின்றனையோ. நான் வயிறுற உண்டு களிக்கின்றேன்" என்று புலம்பும் ஒலி என் செவிசார விரைந்து உட்சென்றேன். அவ்வறையினில் உள்ள ஓர் சாய்வு நாற்காலியில் அவர் சாய்ந்துகொண் டிருந்தார். கண்ணோ நீரை வடித்துக்கொண்டிருந்தது. திகைத்து நான் நின்றுவிட்டேன். என் வரவறிந்த அப்பெரியார் தம்முகம் திருத்திக்கொண்டு " பெண்ணே, வா" என்று என்னை வரவேற்றார். அப்பெருந்தகை இன்னபடி வருந்துவதன் காரணமோ தெரியவில்லை. இன்று கேட்டுத் தெரிவதற்கு எண்ணின நான் கொண்டு வந்த உண்டிப்பொருளைக் கீழேவைத்துவிட்டு, அவரடி சாய்ந்து, "ஐயன்மீர், நீங்கள் இப்படித் தனிமையில் கலங்குவது காணப்போறேன். உங்களது [illegible]டி தொழுகின்றேன். உங்கள் மனம்புக் குழக்கும் ஒன்றை நானும் பகிர்ந்துகொள்ள அருள்புரிவீர். எந்தையே, எனக்கிது மறுக்கவேண்டா" என்று இரந்த என்னைத் தூக்கியெடுத்துத் தன்னருகிருத்திப், "பெண்ணே சொல்கின்றேன். சிற்றுண்டியை உண்" என்றார். இருவேமும் அதைத் தின்றோம். பின் என்னையழைத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றார். இருவேமும் ஓர் மரத்தடியில் அமைக்கப்பெற்ற மேடையொன்றில் உட்கார்ந்தோம். சிறிதுநேரம் மௌனமாய் இருந்த அவர், "இச்சீருறு மாலைதன்னில் உன்னோடு அவளும் என்னயல் இருப்பின் உய்ந்தவன் ஆகேனோ. கடவுளே என்னையேன் சோதிக்கின்றாய்" என்றார். " ஐயனே, விளங்கவில்லை. அப்பூவையும் யாரோ" என்று நான் கேட்க அவரும் சொல்லலானார்:—

" பெண்ணே கேள். இந்நாள்வரை மூடிவைத்திருந்ததைக் கூறுகின்றேன். செல்வமும் செல்வாக்கும் சிறந்தவொரு பெருங்குலத்தில் யார்பாலும் குற்றமே காணாக் குணமுடைய பெரியோ னொருவனுக்கு இளையோனாய் நான் பிறந்தேன். அவனுக்கொரு தாயிலாப் பெண்ணிருந்தாள். சிறியோர் சேர்க்கையில் ஆழ்ந்ததால் விளைந்த என் சிறுமதிக் கயமை தூண்ட என் அண்ணனுடன் மாறுபட்டு, அப்பெருந்தகைக்குஇன்னல் பல சூழ்ந்தேன். நான் கொடும்பாவி, இயற்கைக் கொடியோன். இல்லையேல் என் முன்னவன் பெருமையில் வளர்ந்திரேனோ. சிற்றினக் கயவனை நான், இனத்தொடு சூழ்ந்து மானுடத் தன்மையெல்லாம் கொட்டிவிட்டேன். எமது குடும்பத்தின் செல்வத்தையெல்லாம் சீரழியச் செய்தேன். பின் வழக்கும் தொடர்ந்தேன். பிறகு இருவரும் பிரிந்தோம். ஒவ்வொன்றிலும் என் உடன்பிறந்த பெருமகன் நடந்துகொண்ட பெருமையை எண்ணவெண்ண அவ்வெண்ணம் என்னைச் சுட்டெரிக்கின்றது. பிரிந்தபின் கடல்கடந்து வெளிநாடு சென்றேன். சென்ற சில காலத்தில் என் மனைவியும் இறந்தாள். அவள் மிக நல்லவள். என் அண்ணனது குணத்தையெல்லாம் ஒருங்கே பெற்றவள். பின்னர் என் அண்ணன் விண்ணடைந்த செய்தியும் எட்டியது. இப்படித் துக்கத்தின் மேல் துக்கம் வர என் புத்தியும் நல்வழி நினைக்க

லாயிற்று. என் னண்ணன்மகள்பால் தந்தையின் கடனாற்றி நான் புரிந்த கொடுமைகளுக்கு ஈடுசெய்யத் துணிந்தனனாய், நான் இளமையில் தொலைத்த பொருளை என்னுழைப்பால் ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டேன். பெரும் பொருளும் ஈட்டிவிட்டேன். என் முயற்சி முடிவுற, அப்பொருளை என்னுருயிர்த் தேவகிபால் சேர்த்துவிடத் தாய்நாடு திரும்பிய நான், என் செல்வியைக் காணாமல் தவிக்கின்றேன். எவ்விடமோசென்றுவிட்டாள். அவளது மாமன் மனையுளோருங்குடந்தையில் இல்லை. சித்தூர் சென்றுளாளென்று கேள்விப்பட்டுஅங்கும் சென்று தேடினேன். எங்குங் காணக்கிடைக்கவில்லை. என் செய்வேன். என் கண்ணே, தேவகி, எங்கிருக்கின்றாய். தவிக்கின்ற என்முன் வந்துநின்று என் துயர் தீராயோ....."

இன்னபடி கூறிப் புலம்பின என் அப்பன் அப்படியே மூர்ச்சையுற்றுத் தரையிற் சாய்ந்தார். இவர் என் சிற்றப்பன் என்று தெரியவரவே நான் உற்றமகிழ்ச்சிக்கோ ரளவில்லை. ஓடோடித் தண்ணீர் கொண்டு வந்து முகத்திலே தெளித்தேன். விசிறி கொணர்ந்து வீசினேன். அதற்குள் மனையிலோரும் வந்து கூடினர். என் சிற்றப்பனும் கண் விழித்தார். அவரை மெல்லப் படுக்கையின்மீது எடுத்து அமர்த்தி அவரயல் இருந்துகொண்டு அவருக்கு ஆவன செய்தேன். "நான் தங்கள் தேவகியே" என்று சொல்லிவிடலாமா என்று பலமுறை எண்ணினேன். எண்ணினேனே யல்லால் எண்ணியபடி செய்யவில்லை. ஏனென்றும் எனக்குத் தெரியவில்லை. என்றாலும், 'எந்தாய், சீக்கிரத்தில் உங்கள் மகளைக் காணப் பெறுவீர். நானும் சோதரியைப் பெறுவேன்" என்று கூறினேன். தான் விழைவதும் அதுவே யென்றார். இரவும் வந்தது, என் சிற்றப்பனை உண்ணச் செய்தேன். 'பெண்ணே நீ வந்ததுமுதல் என்னருமைப் பெண்ணைக் மீண்டும் காணப் பெறுவேன் என்ற நம்பிக்கை என்னிடை எழுகின்றது. என் வலக்கண்ணும் வலத்தோளும் அடிக்கடி துடிப்பதும் உண்டு. ஓர் சோதிடனும் சில தினங்களுக்குமுன் "இழந்த வொன்றைப் பெறுவீர்" என்றான். எல்லாம் ஈசன் செயல் என்று கூறி எனக்கு விடையளித்தார்.

பெற்றேன் நானும் என் சிற்றப்பனை. இன்றே உணர்ந்தேன் அப்பனதன்மை. உள்ள உவகையால் உலகளந்த நெடுமால்போல் வீங்கினேன். திருவரங்கத்திற் கண்வளரும் பெரும்பாயற் பரஞ்சுடரை, நினைத்து நினைத்து என் னிருகரங் குவித்து இரவெல்லாம் வழுத்தினேன். இரவு முழுதும் எழுவதும், நடப்பதும், சிரிப்பதும், அழுவதும் படுப்பதுமாகி என்னறையைத் தேய்த்தேன். உலகத்தில் நடப்பனவெல்லாம் இறுதியில் நன்மைக்குத்தான் என்ற பழமொழியின் வாய்மையை நன்கு அறிந்துவிட்டேன். துன்பம்போல் தோற்றுவனவெல்லாம், நன்மையின் துவக்கமே. ஜயரங்க பூபதியின் அன்னையார் நெடிதுநாள் வாழவேண்டும். அவள் ஏசிய கொடுஞ்சொற்கள் என் சிற்றப்பனை நான் பெறுவதற்கு ஏற்ற வொரு என் நல்வினையே யானது. வாழ்த்துகின்றேன் அப்பெருந்தகைச் சீமாட்டியை. பெண்பாலார் ஒருவரும் எனக்குத் தீமை யிழைக்கவில்லை. இனி நான் அப்பாலாரைக் கடியேன். என்மாமன் மனைவியும் எனக்கு நன்மையே செய்துவைத்தாள். என்னை யவள் குடந்தையினின்று ஓட்டியது, என் கண்ணிலே என்றும் கரந்து உறையும் என் ஜயரங்க பூபதியைக் காணச்செய்தது; அன்னையவள் ஓட்டிவிட என்னப்பனைப் பெற்றேன். என் அப்பனைப் பெற்றதுபோல் என்கொற்றவனையும் எளிதாகப் பெறுவேன் என்ற நம்பிக்கையொன்று இப்பொழுது என்னுள் எழுந்தது. என்னைத்தெருவிலே ஓட்டியவர் செயல் எல்லாம்நன்மையே யானது. எனவே தீமையென்பது ஒன்றில்லை. யாராலும் இன்னொருவருக்கு எவ்வகைத்தீமையென்பது செய்தலும் இயலாது. இனியும் என்பால் நன்மை வந்தெய்த என்னை வெளியிலே ஓட்டிவிடும் புண்ணியத்தை ஏற்பதற்கு யாருளரோ அறியேன். இன்னபடி எண்ணமிட்டு அவ்விரவை ஓட்டிவிட்டேன்.

கடைச்சாமக் கோழியும் கூவியது. கதிரவனும் குணக்குன்று ஏறினான். என்னுள்ளம்போல் எங்கும் வெளிச்சம் பரவியது. புதுப்பிறவி யெடுத்தவள் போல படுக்கைதுறந்து வெளிவந்து என் அப்பனது திருப்பணியில் பொருந்தினேன்.

இவ்வாறு நான் எனதப்பனோடு வசித்திருக்கும் நாள் மாலையொன்றில் தளர்ந்த உடலினராய் எழுபதாண்டு மதிக்கக்கூடிய ஒரு வயோதிகர் என் தந்தையைக் காணுமாறு வந்தார். அவர் இதன் முன்னும் அடிக்கடிவந்து பேசிப்போவதுண்டு. வந்தவரை என் சிற்றப்பன் அன்போடு வரவேற்றுச் சிற்றுண்டியளித்துப் பின் நெடுநேரம் அளவளாவிக்கொண்டிருந்தார். இவர்கள் பேச்சு மெல்லமெல்ல ஊர்வம்பாக மாறிற்று. மாறியபேச்சு கடன் என்றும் வட்டியென்றும் வழக்கு என்றும் தொடர்வதாக இறுதியில், அவ்வயோதிகர், "ஐய, சித்தூர் ஜமீன்தாரைப் பற்றி அறிவீரோ" என்று கேட்டார்.

இவ்வினா என்னைக் கவரவே, என் சிறிய தந்தையின் அருகுவந்து அவ்வயோதிகர்வாயிலே என்கண்ணையும் என் செவியிலே மனதையும் வைத்தவளாய் உட்கார்ந்திருந்தேன். என் சிற்றப்பன், "எனக்கொன்றும் தெரியாதே. அதிகம் கடன் பட்டுள்ளார் என்றும், இன்னும் கலியாணமாகவில்லை என்றும் கேள்விப்பட்டுள்ளேன். நல்லவர் என்றும் அவரோடு பழகினவர் கூறுகின்றார்கள். முன்யோசனை யில்லாதவர்கள் கஷ்டப்படவேண்டுவது தகுதிதானே. அவர் என் கடன்வாங்கி இறுதியில் இப்படிச் சீரழிய வேண்டும்," என்று பதில் மொழிந்தார்.

"ஆம், நல்லவர்தான். கபடமற்றவர். யார்மாட்டும் வஞ்சனையோ புரிய அறியாதவர். வருந்தியவர் அவர் மனைசென்று வருத்தம் தீராமல் திரும்பியதில்லை. அவருடைய அன்னையும் மிக்க நல்லவர். நல்லவர்களுக்கே கஷ்டம் வருகின்றது" என்று அப்பெரியார் முடித்தார். முடித்தவர் பின்னும் கூறினார்.

"ஒரு சமயம் பண நெருக்கடி ஏற்பட, அப்புண்ணியவானிடம் சென்று என்நிலை யிது வென்றும், இப்பொழுது இரண்டாயிரம் தந்துதவியினால், உற்றுள இக்கட்டினிலிருந்து தப்பலாம் என்றும் கூறினேன். அன்றிரவே அத்தொகையைக் கொடுத்துதவினார். ஆறுமாத காலம் சென்றபின் பணத்தைத் திருப்பிக் கொடுத்தேன். வட்டியும் பெற மறுத்துவிட்டார். இந்நாளில் இத்தகைய ஒருவரைக் காண இயலுமோ?....."

“வீணர் பலர் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரைக் கெடுத்தொழிந்தார். கருணையில்லாத் தவணைக் கடைக்காரரும் கோர்ட்டின் துணைகொண்டு அவரது ஜமீனைக் கவர்ந்துவிட முயன்றுவருகின்றனர். இப்படிக் கஷ்டப்படுகின்றார் அவர். ஜமீன் சொத்துக்களை அவர் இழக்காவண்ணம் செய்வதற்கு நான் சில தினங்களாக முயன்றுவருகின்றேன். அவர் படுகின்ற கஷ்டம் போதாதென்பது கடவுள் சித்தம் போலும். பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பது அவர்பாலா உண்மையாகவேண்டும்; கடவுளுக்குக் கண்ணில்லை......” என்று அவர் கூறி முடித்ததும், ‘மேல் என்ன நடந்தது’ என்று கேட்டேன். என் வார்த்தையை ஒருவரும் கவனிக்கவில்லை. “கடவுளுக்கு கண்ணில்லை என்றீர்களே, மேல் என்ன நடந்தது” என்று என் சிற்றப்பன் கேட்டார். “மேலே, என்ன! அப்பெருமகன் மனையும் தீக்கிரையாயது” என்று கூறி பெருமூச் செறிந்தார்.

இம்மாற்றம் என் உள்ளத்திலும் அனலை மூட்டி வைத்தது. “எப்பொழுது? அவர் கதி என்னவாயிற்று?” என்று விரைந்து வினவினேன்.

வந்த அந்தப்பெரியவர் எனது வினாவிற்குரியவிடை கூறாது என் சிற்றப்பனை நோக்கி, ‘இப்பெண் யார்’ என்று கேட்டார். என் சிற்றப்பனும், “திக்கற்ற இப்பெண் என் பெண்ணோ யாவாள்” என்று அவருக்குக் கூறிப் பின், “குழந்தாய், அவரை நீ அறிவையோ’ என்று என்னைக் கேட்க, “நான் அவரை எப்படி அறிந்திருக்க முடியும். யாவரேயாயினும் நல்லவர் ஒருவர் உற்றுளார் இடுக்கண் என்ற செய்தி என்னைக் கலங்கச்செய்தது. மேல் என்ன நடந்தது என்று அறிய எண்ணினேன்.” என்று விடையளித்தேன். வந்தவர் தமது கதயை விட்டவிடமிருந்து தொடங்கினார்.

“இன்னபடி இன்னல் பலவற்றிற்குள்ளாய் அவர் வருந்துவது போதாதென்று தீக்கடவுளும் அவர்பால் தன் திருவிளையாடலைப் புரிந்தான். ஒருமாதத்திற்குமுன் அவரது மாளிகை தீக்கிரையாயிற்று. அத்துடன் உடைமைகளும் நாசமாயின. தாயாரும் தீயால் இறந்துபோனார். அவரது அருமைப் புதல்வியும் இப்பொழுது வைத்தியசாலையிலிருக்கின்றாள்......” என்று அவர் கூறுகையில் “அவர் கதி என்னாயிற்று” என்று நான் கேட்டேன். “அம்ம குழந்தாய். எரிகின்ற மாளிகையினின்று தாயாரை வெளியே கொணர்ந்துவிட்டுத் தமது பெண்ணினைக் கொண்டுவரச் சென்றவர் திரும்புகையில் காலிடறிக் கீழே விழுந்தனராம். ஆனால் நல்ல வேளையாய் உயிர் தப்பினர். கால் சிறிது ஊனமானதென்றும் கண் பார்வை சிறிது கெட்டது என்றும் தெரிகின்றது.” என்று அவர் முடிக்க, நானோ துக்கத்தின் வயமாய் அவ்விடம் பெயர்ந்தகன்றேன்.

தமிழ்ப் பாடம் 70.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[371-வது பக்கத் தொடர்ச்சி]

கார்க்கோடகன் கொடுத்த துகில்களை உடுக்கவும் நளன், வெம்பிக் கருகிக் குறுகியிருந்த தன் உருவம்மாறிப் பண்டைவண்ணமாய் நிற்கத் தமயந்தியும் மக்களிருவரோடு அவன்பாதங்களைவணங்கியெழுந்த தன்மையை இனிவரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

—

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 72.

பதப்பிரிவு:—மிக்கோன் உலகு அளந்த மெய் அடியே சார்வு ஆக புக்கோர் அரு வினைபோல் போயிற்று அ காலம் கான் அகத்தே காதலியை நீத்து கரந்து உறையும் மான் நகம் தேர் பாகன் வடிவு.

அன்வயம்:—அக்காலம் கான் அகத்தே காதலியை நீத்துக் கரந்து உறையும் மான்நகத்தேர்ப் பாகன் வடிவு, உலகு அளந்த மிக்கோன் மெய் அடியே சார்வு ஆகப் புக்கோர் அருவினைபோல், போயிற்று.

பதவுரை

அ - அந்த
காலம் - காலத்தில்
கான் - காட்டின்
அகத்தே-இடத்திலே
காதலியை-தன் மனைவியை
நீத்து-கைவிட்டு
கரந்து-(உருவம்மாறி) மறைந்து
உறையும்-வசிக்கும், (அந்த)
மான்-குதிரைகளைக் கட்டிய
நகம்-மலைபோன்ற
தேர்-தேரினது
பாகன்-பாகனுடைய
வடிவு-வடிவானது (அரவரசன் கொடுத்திருந்த
ஆடைகளை யணிந்தவுடன்)
உலகு-உலகத்தை [தற்கு) அளந்த
அளந்த-(மகாபலிச் சக்கரவர்த்தியின்பால் பெறுவ
மிக்கோன் - யாவரிலும் உயர்ந்தவனை திருமாலி
மெய் - மெய்யாகிய [னது
அடியே - பாதங்களே
சார்வுஆக - தமக்குத் துணையாக
புக்கோர் - தஞ்சமடைந்தவர்களுடைய
அரு - (விலக்குவதற்கு) அருமையான
வினைபோல் - கர்மங்களைப்போல
போயிற்று - அகன்றது.

விரிவுரை:—நளனைவிட்டுக் கலி நீங்கியதைக்கூறும் செய்யுள் அன்று இது. அதனை முன்னரே (49-வது செய்யுளில்) கூறிவிட்டார். நாராயணாய நம, என்று அவன் அடியில் சேராரை வெந்துயரம் சேர்வது போல்நளனைக் கலி பற்றினான் எனக் கூறிய புகழேந்தி, அக் கலி நீங்குவதற்கு, சந்திரன்சுவர்க்கியைச்சென்று அடைந்த பாவலர் பசிநீங்குவதை உவமையாக்கினார். ஆனால் இங்கு இவன் பழைய தன் அழகிய வடிவத்தை எய்தும் சந்தர்ப்பத்தில் முதல்உரைத்த உவமை தொடரலாகின்றது. உலகளந்தபெருமாள்தன் திருவடிகளே தமக்குத் தஞ்சமென அடையாமல் திரிகின்றவர்களைக் கொடிய துயரம் சேர்வது நிச்சயம். அப்படியே அவன் பாதங்களைப் பற்றினவனுடைய வினைகள் நீங்குவதும் நிச்சயம். வினைகளிலிருந்து நீங்கிய ஆன்மா தன்னுடைய பழைய மாசற்ற வோர் ஜோதிமய ரூபத்தில் நிற்கும். நளனும் இன்றைக்கு அவ்வாறே நின்றான்.

—

[பப்
தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரரும்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து. 73.

கருத்து:—தன் தந்தையை இவ்விதம் கண்ட இந்திரசேனன், இந்திரசேனைபோடு அவன் பாதங்களில் விழுந்து கண்ணீர் சொரிந்தான்.

—

பாதித் துகிலோடு பாய்ந்தழியுங் கண்ணீரும்
சீதக் களபதனஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீ ரவற்கு. 74.

கருத்து:—தமயந்தியும் தன்னுடைய துன்பக் கோலத்தைத் தாங்கிச்சென்று நளனுடைய பாதங்களிற் பணிந்தாள். அவளுடைய நிலையைக் காண நளனுக்குக் கண்களில் நீர் பெருகியது.

—

[கொள்
வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்
அவ்விடத்தே நீத்த வவரென்றே இவ்விடத்தே
வாரார் முலையாளம் மன்னவனைக் காணாமல்
நீரான் மறைத்தனவே நின்று 75.

பதப்பிரிவு:—வெம்மை விடத்தோடு ஒக்கும் விழி இரண்டும் வீழ் துயில்கொள் அ இடத்தே நீத்த அவர் என்று இவ் இடத்து வார் ஆர் முலையாள் அ மன்னவனை காணாமல் நிரால் மறைத்தன நின்று.

அன்வயம்:—வீழ் துயில்கொள் அவ்விடத்தே நீத்த அவர் என்று, வெம் விடத்தோடு ஒக்கும் விழி இரண்டும், வார் ஆர் முலையாள் அம் மன்னவனைக் காணாமல் இவ்விடத்தில் நீரால் நின்று மறைத்தன.

பதவுரை.

“வீழ் - (யாவராலும்) விரும்பப்படுகின்ற
துயில் - நித்திரையை
கொள் - கொண்ட
அ - அந்த
இடத்தே - இடமாகிய பாழ்மண்டபத்திலே
நீத்த - நீங்கிப்போன
அவர் - அவனல்லனோ இவன்”
என்று - என்று நினைத்து,
வெம் - கொடிய
விடத்தோடு - விஷத்தை
ஒக்கும் - ஒத்திருக்கும்
இரண்டு - இரண்டு
விழியும் - கண்களும்,
வார் - கச்சானது
ஆர் - பொருந்திய
முலையாள் - முலைகளையுடைய தமயந்தி
அ - அந்த
மன்னவனை - நளவேந்தனை,
காணமல் - பார்க்காதபடி
இவ்விடத்தில் - இப்பொழுது
நின்று - இடைவிடாமல்
நீரால் - கண்ணீரினால்
மறைத்தன - மறைக்கலாயின

விரிவுரை:—நளனைத் தொழுது எழுந்த தமயந்தி கண்களில் நீர்பொங்க நின்றாள், என்பது இச் செய்யுளின் கருத்து. அன்றைக்குத் தூங்கிக் கொண்டிருந்த பொழுது சிறிதும் இரக்கமின்றி நடுவனத்திலோர் பாழ்மண்டபத்தில் தனியே விட்டுச்சென்ற இக்கன்னெஞ்சன் இன்று மீண்டானென்றால் அவனைக் கொண்டாட வேண்டுமோ! அவனைப் பார்க்கவும் படாது, என்று தமயந்தியின் கண்கள் கோபத்தால் அவள் அவனைப்பார்க்காவண்ணம் நீராகிய திரையிட்டு மறைத்தனவாம் இயற்கையாகத் தமயந்தியின் கண்களில் நீர்பெருகுவதற்கு இப்படி ஒரு கருத்தைக் கவி கற்பித்துவைத்தலால் இது தற்குறிப்பேற்ற வணி.

—

இலக்கணம்.

இந்தச் செய்யுளில், துயில்கொள் அவ்விடத்தே, என்ற தொடரில் கோள் என்பது, கொண்ட என்று இருக்கவேண்டிய பெயரெச்சத்தின், காலம் மறைந்த உருவத்தில் இருப்பதால் அது வினைத்தொகை. அவ்விதமே, ஆர்முலையாள், என்பதும் வினைத்தொகை. ஆர்ந்த என்ற பெயரெச்சம் காலம் கரந்து ஆர் என நிற்கின்றது.

இனிப் பண்புத்தொகையைப் பார்ப்போம். வெவ்விடம், என்று இந்தச் செய்யுளில் வந்திருக்கின்றது. இதனில் இரண்டு பதங்கள் புணர்ந்திருக்கின்றன. அவைகளைப் பிரித்தால் வெம்மை விடம், என்று ஆகும். வெம்மை என்னும் பண்புப் பெயர் புணரும்போது இங்கு வெ என்றுநின்றது. வெம்மைவிடம், என்றால் என்ன அர்த்தம். விடம், என்னும்வருமொழியின் குணம் அல்லது தன்மையை, நிலைமொழிகாட்டி நிற்கின்றது. இவ்வாறு குணத்தைக் காட்டுகின்றதென்பதைக் குறிக்கக்கூடிய சொல், ஆகிய என்னும் சொல்லாம். வெம்மை ஆகிய விடம், என்று இருக்கவேண்டிய அத்தொடரில் ஆகிய என்னும் பண்பைக் காட்டும் சொல் தொக்கு, வெம்மைவிடம்(இது பிறகு புணர்ச்சியால் வெவ்விடம் என்று ஆயிற்று; அதைப் பற்றி இங்குக் கவனிக்கவேண்டா) என்று நிற்பதால் இது பண்புத் தொகைநிலைத்தொடர். தண்ணீர், வெந்நீர், என்பன விரிந்தால் தண்மை ஆகிய நீர், வெம்மை ஆகியநீர் என விரியும்; இப்படி இரண்டு சொற்களுக்கு மிடையே ஆகிய என்னும் பண்புருபு தொக்கு இருக்குமானால் அத்தொடர்பண்புத்தொகைநிலைத்தொடர்.

பண்பு என்றாலும் தன்மையென்றாலும் அர்த்தம் ஒன்றுதான். வருமொழியின் தன்மை இன்னதுஎன்பதை நிலைமொழி காட்டி, அவ்வாறு காட்டுகின்றதென்பதைக் குறிப்பதற்கு வேண்டிய ஆகிய என்னும் சொல்லும் இடையே தொக்கு இருக்குமாயின், அப்படிப்பட்ட தொடர்களையெல்லாம் பண்புத்தொகை என்று கொள்ளுங்கள்.

ஒரு கடவுள், இருவினை, முக்குணம், நால்வேதம், ஐம்பொறி, அறுசுவை; என்பனவெல்லாம் பண்புத்தொகைகள், ஏனெனில், கடவுள் வினை குணம், முதலிய வருமொழிகள் அளவில் என்ன தன்மையை உடையனவா யிருக்கின்றன வென்பதைத் திரு, இரு

மூன்று,முதலிய நிலைமொழிகள் காட்டுகின்றன. காட்டும்போது ஒன்று ஆகிய கடவுள், இரண்டு ஆகிய வினை,மூன்று ஆகிய குணம், என்று சொல்லவேண்டியது அவசியமாதலால், அந்த அவசியமான சொல், ஆகிய என்பது தொக்கு இருக்கின்ற காரணத்தால் இத்தொடர்களைப் பண்புத்தொகைகள் என்கின்றோம். அப்படியே, கால்பங்கு,அரை வீசை,படிநெய், முதலிய போன்றனவும் பண்புத் தொகைகள் ஆகும்.

தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்.

[365-வது பக்கத் தொடர்ச்சி]

திக்கு விஜயம்

அன்னார் தத்தம் நாட்டைச் சுற்றியுள்ள குறுநில மன்னர்களோடு சமர்செய்வது சர்வசாதாரணமாயிருந்தது. தங்களுக்குள்ளேயே பொருதலுமுண்டு. விந்திய பர்வதத்திற்கு வடக்கேயும் படையெடுத்துச் சென்றுஜெயக்கொடிநாட்டினர்சிலர். திரைகடல் கடந்து சென்று ஈழதேசம் ஜாவாநாடு முதலிய வெகு தூரத்திலுள்ள தேசங்களை ஜெயித்தனர் சிலர். கங்கைப் பிராஞ்சியத்து அரசனை கனகவிஜயன் என்பவனைத் தோற்கடித்துச் சிறைகொண்டான் சேரன் செங்குட்டுவன். கலிங்கபூபதியை ஜெயித்துச் சோழநாட்டைப் பெருக்கினன் விஜயதர சோழனது சேனாதிபதி கருணாகரத் தொண்டைமான் வேங்கி நாட்டு மன்னன் விமலாதித்தனை வென்றான் இராஜேந்திர சோழன். கங்கைக்கு அப்பாலும் சென்று வெற்றிக் கொடி விரித்த இராஜேந்திரனுக்கு "கங்கைகொண்ட சோழன்" என்ற சிறப்புப்பெயரு மளிக்கப்பட்டது. அன்னவன் கீர்த்தி என்றும் நிலைபெற்றிருக்குமாறு ஒவ்வொரு விஷ்ணு ஸ்தலத்திலும் "கங்கை கொண்டான் மண்டபம்" என்னும் ஒரு கல்மண்டபங் கட்டியிருப்பதை இன்றும் காண்கிறோம். விஷ்ணுவாலய உற்சவ காலங்களில் சுவாமி திருவீதி வலங்கொண்டருளும்பொழுது கங்கைகொண்டான் மண்டபத்தில் சற்றுநேரம் எழுந்தருளுவது வழக்கமாயிருக்கிறது.பக்தகோடிகள் அச்சமயம்சிரமபரிகாரமடைவதோடு பகவத் பிரசாதங்களையும் சிறிதுபெறுகிறார்கள்.

மாண்புற்ற மகன்இராஜேந்திரன் வடஇந்தியாவில் வெற்றிவாகை சூடியபொழுது அவன்தந்தை இராஜ இராஜன் தென்னிந்தியாவில் வெற்றிக்கொடி விரித்தான். சேரமன்னனது செருக்கைச் செற்றான். மைசூர் தேயத்தின் கீழ்ப்பாகமாகிய கங்கபாடிக் காவலன் போசளராஜனது கர்வத்தைக் கடிந்தான். கங்கபாடியின் தலைநகராகிய தழைக்காட்டிற்கு இராஜ ராஜபுரம் என்ற பெயரைக் கொடுத்தான். மலையாளம், கொல்லம், குடகு, மாலவீ தீவுகள், முதலிய பற்பல பிரதேசங்களைத் தன்னடிக்கீழ்க் கொணர்ந்தான். ஆகவே சேரனும் பாண்டியனுமாகிய ஒப்பற்ற வீர சூரர்களே சோழனடி பணியலாயினரென்றால் மற்றவர்களைக் குறித்து விவரிக்க வேண்டுமோ?

ஒரு நாள் இராஜேந்திரசோழனெனப்படும் முதற் குலோத்துங்க சோழன் காஞ்சிமாநகரிலுள்ள அரண்மனையில் கச்சேரி மண்டபத்தில் வீற்றிருந்தபொழுது வாயிற்காப்போரில் ஒருவன் ஓடி வந்து அரசனை நமஸ்கரித்து, 'இணையற்ற இறைவனே! குறுநில மன்னர் திறைப்பொருள் கொணர்ந்து தங்கள் தரிசனத்தை எதிர்பார்க்கின்றனர்" என்று பணித்தான். அதனைக் கேட்ட சோழர் பிரான், "அன்னாரை உள்ளே விடுக" என்று பணித்ததும்,

தென்னவர் வில்லவர் கூபகர் சாபகர் சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர் காரிபர் கோசலரே
கங்கர் கராளர் கவிந்தர் துமிந்தர் கடம்பர் நுளம்பர்களே
வங்க ரிலாடர் மராடர் விராடர் மயிந்தர் சயிந்தர்களே
சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர் செய்யவ ரையணரே
கொங்கணர் கொங்கர் குலுங்கர் சௌந்தியர் குச்சரர்
கச்சியரே
மத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர் மச்சர் மிலேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர் குருக்கர் வியத்தர்
களே'!

என்ற நானாதேய சிற்றரசர்களும் சோழனடிகளில் முடிபட வணங்கி, "ஏகசக்ராதிபதி! அடியோங்கள் நினக்கு இறுக்கக் கடவதாகிய திறைப்பொருளைச் சமர்ப்பிக்கின்றோம்" என்று விண்ணப்பித்துத் தாம் கொண்டுவந்த பொற்கலம், மணித்திரள், தந்தம், பவழம் முதலான பொருள்கள் அனைத்தையும் அரசன் ஸந்நிதானத்திற் குவித்தனர்கள் என்றால் சோழ பூமண்டலாதிபதியின் ஒப்பற்ற ஆற்றலுக்கு மற்றொரு சான்றும் வேண்டுமோ?

உயுத்த வன்னகம்

செந்தமிழ்ச் சீர்மைச் செம்மல்களின் புஜபல பராக்கிரம வீர தீரச் செயல்களைக் குறித்துச் சிறிது கவனிப்போம்: அவர்கள் ஒவ்வொருவரும் சிறு பிராயத்திலிருந்தே வில்வித்தை, வாள் வித்தை, சிலம்ப வித்தைகளில் செவ்வனே பழக்கப்பட்டார்கள். வில் கணை முதலிய எய்வனவும், சக்கரம் தோமரம் முதலிய எறிவனவும், வாள் பரிசை கத்தி முதலிய வெட்டுவனவும், சூலம் ஈட்டி முதலிய குத்துவனவுமாகிய ஆயுதங்களை ஸகஜமாய்க் கையாளுவார்கள். சத்துருக்களுக்கெதிரே புல்வாய்க் கூட்டத்திற் புகுந்த புலி போலவும், கஜக்குழாத்திற்கு முன் நின்ற கேசரி போலவும் கர்ஜித்து நிர்ப்பயமாய் முன்வைத்தகாலைப் பின் வைக்காமல், புறமுதுகு காட்டாது, உயிரைத் துரும்பென மதித்து, ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு என்பதை நிச்சயித்து, இறந்தால் வீர சொர்க்கலாபம் ஜெயித்தால் விரிந்த ராஜ்ய லாபமென்றே நம்பிக்கையைக் கைக்கொண்டு முன்னே காயப்பட மூர்த்தன்னியமாய் முனைவார்கள். ஹூங்காரஞ் செய்து உற்சாக மூட்டி, பல்லைக் கடித்துப் பயங்கர மூட்டி, மீசை முறுக்கி முண்டாசைக் கட்டி, தோள் தட்டிக் கொக்கரித்துத் தொடை தட்டி ஆர்ப்பரித்து, எதிரிகளைக் கண்டதுண்டமாக்கி, சத்துருக்களை நீறு சாம்பராக்கி வெற்றிமாலை பூண்டு வேகமாய் வருவார்கள்.

அவர்களுடைய சைன்யம்—(1) மூலப்படை (2) கூலிப்படை (3) நாட்டுப்படை (4) காட்டுப்படை (5) துணைப்படை (6) பகைப்படை என ஆறு வகைப்பட்டதாகும். அதில் ஒவ்வொன்றும் (1) தேர்ப்படை (2) யானைப்படை (3) குதிரைப்படை (4) காலாட்படை என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டது. மற்றும் காலாட்படையென்பது (1) அஸ்திரப் படை (2) ஈட்டிப்படை (3) வாட்படை என்ற முப்பாகங்களைக் கொண்டதாகும்.

அரசிறையும் வருவாயும்

அருந்தமிழ்த் தரணியாளர் தர்மமான அரசிறையினைத் தர்மமான முறையிலேயே வசூலித்துவந்தார்களென்று தெரிகின்றது. நிலமாசூல்களிலிருந்து ஆறிலொருபங்கு கடமையே வசூலித்தனர். நீர்வரி, உப்புவரி, ஆயத்துறைச் சுங்வரி, சூதுவரி, கசித்தாயம், பஞ்சவாசம், சில்லிறை, எச்சோறு, கூற்றரிசி, ஆற்றுக்கால், அமஞ்சி, எரிக்கட்டு, பாடக நெல், உறவிறை, நீர்விலை, வெட்டி, தனியாள், ஆயம், பாடிகாவல், கார்த்திகைக்காசு, கார்த்திகைப் பச்சை, தறி, இறை, கடையிடை, தட்டார்ப் பாட்டம், செக்குக் கடமை, பட்டோலைக் காசு, கண்காணி, கணக்கவரி, முள்ளடி, இனவரி, அச்சுத்தறி, சாலி னகத்தறி, தூசகத்தறி, பறைத்தறி என்ற பல வரிகள் வசூலிக்கப்பட்டன. வரிகளின் பெயர்கள் மிகுந்துள்ளமை பற்றி அரசாங்கவரிகள் அக்காலத்தில் மிகுந்திருந்தனவென்று கருதுதல் பிசகு. ஒவ்வொரு தொழிலின் பெயரையும் சுட்டி வரிப்பெயர் குறிக்கப் பெற்றிருத்தலின் காரணமாக வரிப்பெயர்கள் மிகு ந்து காணப்படுகின்றனவே யன்றி வேறில்லை. இந்நா ளில் தொழில் வரி என்ற பொதுப்பெயரால் எ லாத் தொழிலாளரிடத்தும் வெவ்வேறு வரி வாங்க படுகின்றது. ஆகவே தற்காலத்திய தொழில்வா யொன்றே எல்லாத்தொழில்களுக்கு முரிய பல்வகை வரிகளையும் தன்னகத்து அடக்கிக்கொண்டு நிற்ற கவனிக்கத்தககது.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[370-வது பக்கத் தொடர்ச்சி]

சூ

1083 சூகை யானையுஞ் சூகை யாகும்.

1084 சூத மாமரமும் வண்டும் பிறப்பும்
[1]பாகரு மெனவே பகர லாகும்.

1085 சூதகம் பெண்முலைக் கண்ணும் பிறப்பும்
ஆசூசமும் பெண்பாற் பூப்பு மாகும்.

1086 சூது தாமரையுஞ் சூது மாகும்.

1087 சூத்திரன் சாதியுந் தச்சனு மாகும்.

1088 சூர் அஞ்சாமையுந் தெய்வமும் வஞ்சமும்
நோயு மணங்கு மச்சமுந் துயரும்.

1089 சூரிமூ தணங்கும் புலவனு மாகும்.

1090 சூரன் வீரனு நாயுந் தீயும்
சூரிய னுமெனச் சொல்ல லாகும்.

1091 சூரியன் தீயுஞ் சூரியனு மாகும்.

1092 சூல்கு மூதலுஞ் சினையு மாகும்.

1093 [2]சூல மிரேவதியுஞ் சிவனு யுதமும்.

1094 சூலி சிவனுங் காளியு மாகும்.

1095 சூழி கரிமுக படாமுஞ் சுனையும்.

1096 சூழ்வோர் மந்திரியுஞ் சூழ்வோரு மாகும்.

1097 சூழல் விசாரமுஞ் சூழ்தலு மிடமும்.

1098 சூளை பொதுப்பெண்ணுஞ் சுள்ளையு மாகும்.

செ

1099 செச்சை நீறுஞ் சோடுங் காடுங்
கொச்சை யேறும் வெட்சியுந் தேய்வையும்.

1100 செடிகுண மின்மையுஞ் செறிவுமொளியும்
பாவமு மெனவே பகர லாகும்.

101 செட்டி குமரனுஞ் செட்டியு மாகும்.

102 செண்டு செண்டுங் [3]குதிரைசெல் வீதியும்.

103 செதுக்கு மந்தியும் சேறும் [4]பூதமும்.

104 செந்து நிரையமு மோரியுஞ் சிவனும்
சிவப்பு மனுவுஞ் செப்ப லாகும்.

105 செப்பஞ் செவ்வையுந் தெருவும் நடுநிலையும்
நெஞ்சு மெனவே நிகழ்த்த லாகும்.

106 செம்பு தாம்பிரமு நவ்வலும் பொன்னும்.

107 செம்மை பெருமையுஞ் சிவப்புஞ் செவ்வையும்.

1108 செம்மல் சிவனும் வாரியுஞ் செம்மலும்
அருகனும் பெருமையு மிறைவரும் வீரரும்
பழம்பூவு மகனுஞ் சிறந்தவனு மாகும்.

1109 செம்புலம் பாலை நிலமும் படுகளமும்.

1110 செய்யல் செய்தொழிலுங் காவலுஞ் சேறும்
ஒழுக்கமு மெனவே யுரைக்க லாகும்.

1111 செயிரே குற்றமுஞ் சினவலு மாகும்.

1112 செயல்செய் தொழிலு மொழுக்கமு மாகும்.

1113 செய்வினை வயலும் ஏவல் வினையுமாம்.

1114 செருந்தி வாட்கோரையுஞ் செருந்திப் புதலும்.

1115 செல்செவ் வேலு மிடியு மேவலும்
சிதலையும் விண்ணும் மேகமு மாகும்.

1116 செல்வஞ் சுவர்க்கமுஞ் செல்வமுங் கல்வியும்.

1117 செவ்வி யழகும் பருவமும் பொழுதும்.

1118 செவிலி முன்பிறந் தாளுந் தாதியும்.

1119 செவியே கேள்வியுங் காது மாகும்.

1120 செழுமை வளமுங் கொழுப்பு மாட்சிமையும்
அழகு மெனவே யறைய லாகும்.

1121 சென்னி தலையும் பாணனுஞ் சோழனும்.

1122 சென்னியர் செங்கதிர்க் குலத்து வேந்தரும்
பாணருங் கூத்தரும் பகர லாகும்.

சே

1123 சேகா மழகுஞ் சென்னியுஞ் சூதமும்.

1124 சேக்கை மிருகந்துஞ் சிடமும் முலையும்
தழும்பு பாயலுஞ் சாற்ற லாகும்.

1125 சேடு கட்டிளமையு நன்மையும் பெருமையும்
திரட்சியு மழகுஞ் செப்ப லாகும்.

1126 சேடி விஞ்சைய ரூரும் பாங்கியும்.

1127 சேட னல்லோனுஞ் சேடனு [5]மடிமையும்
பாங்கனு மனந்தனு மிளையோனு மாகும்.

1128 சேட்டை மூதேவியு முறமுஞ் சேட்டையும்.

1129 சேண்விண்ணு முயரமு மகலமுஞ் சேய்த்தும்
நீளமு மெனவே நிகழ்த்த லாகும்.

1130 சேது செய்கரையுஞ் சிவப்பு மாகும்.

1131 சேதகஞ் சேறுஞ் சிவப்பு மாகும்.

(பிரதி)—1. பாதாதமு. 2. இச்சூத்திரம் ஒருபிரதியில் இல்லை. 3. கூர்மையுமாகும். 4. புதமும்.

(பிரதி)—5. மாணும்.

1182 சேத்துச் சிவப்பு மசைச்சொல்லு மையமும்
கருத்து மொப்புங் குறிப்பு மாகும்.
1133 சேதாரம் வெட்சியும் பொன்றேய் மானமும்
தேமா வுமெனச் செப்ப லாகும்.
1134 சேமம் இன்பமுங் காவலு மாகும்.
1135 சேய் செவ்வாயும் சிறுவனு மிளமையும்
தூரமுஞ் சிவப்பு முருகனு நீளமும்.
1136 சேலேகந் திலகமுஞ் சந்தனமு மாகும்.
1137 சேலேகா கோளியுஞ் சேலேயு மாகும்.
1138 சேவல் காவலுஞ் சாவலுஞ் சேறும்
புள்ளா ணுமெனப் புகல லாகும்.
1139 சேவகம் வீரமும் யானைதுயி லிடமும்
துயிலு மெனவே சொல்ல லாகும்.
1140 சேறு தித்திப்பு நரகமுஞ் சாரமும்
விழவுங் கள்ளும் விளம்ப லாகும்.
1141 சேனை படையு மாயுதமு மாகும்.

சை

1142 சையமோர் மலேயும் வெற்பு மாகும்.
1143 சைவம் புராணமும் சிவனும் ஆகமமும்
இளமையுஞ் சைவ சமயமுஞ் சாற்றும்.

சொ

1144 சொல்செந் நெல்லுஞ் சொல்லுங் கள்ளும்
புகழு மெனவே புகல லாகும்.
1145 சொர்க்க முலேயுஞ் சொக்கமு மாகும்.

சோ

1146 சோகங் குறங்குஞ் சோகமு மாகும்.
1147 சோங்கு நாவாயுங் குருகுங் குரங்கும்.
1148 சோதி சங்கரனு மாலு மிரவியுஞ்
சுடருஞ் சோதியும் விளக்கு முடுவும்.
1149 சோமன் புடவையுஞ் சந்திரனு மாகும்.
1150 சோர்வு கள்ளுங் காகமு மாகும்.
1151 சோனே விடாமழை யோணமு மாகும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து 1-ம் தசகம்

[375-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பாசுரம்

போனாய் மாமருதி னடுவேயென்
பொள்ளா மணியே
தேனே யின்னமுதே யென்றென்றே
சிலகூற்றுச் சொல்லத்
தானே லெம்பெருமா னவனனென்
ஞகி யொழிந்தான்
வானே மாநிலமே மற்று
முற்றுமென் னுள்ளனவே.

உரை:—கிருஷ்ணுவதாரத்தில் இரண்டு (அர்ச்சுந) மருதமரங்களின் நடுவே தம் நடைவண்டியை இழுத்துப்போய் அந்த மரங்களான இராக்கதர்களே அடியோடு தன் சகடைகளினல் தள்ளிவிட்ட கதையை நினைத்து, "ஐயோ! கிருஷ்ணனை இராக்கதர்களிருவரும் நலிவுசெய்தாலோ வென்று மனதாரப் பயப்படும் ஆழ்ந்த பக்திமானுயிருக்கின்ற ஒருவன் சொல்லும் பாசுரத்தால்-ஐயோ இரட்டை மருதமரங்களின் நடுவேபோனுயே, என்செய்வது என்று மனவருத்தப்பட்டு, என் துளையிடாத முழுக்காந்தியுள்ள இரத்னமே தேன் போன்றவனே, அருமையான அமிர்தமே என்றென்று அன்று, சில கூற்று சொல்ல-பல சமயங்களில் கபடமாய் மனதில் தைக்காத சில வார்த்தைகளேச்சொல்ல, தானேல்-பகவானுனெனில், எம்பெருமான் - என் ஸ்வாமி, அவன் - அவனே, என்னுகி, நானேஆக, ஒழிந்தான் - முடிந்து விட்டான். அந்தர்பூதனுகிவிட்டான். யான்-செய்தது கைதவம். (மோசம்). அவனே அதை நிஜமாக அதாவது வஸ்து தத்துவமாகச் செய்துவிட்டான். அவன் வேறு நான் வேறு என்று பிரித்துச்சொல்ல வல்லாத வண்ணம் ஒன்று சேர்ந்துவிட்டானென்பது இதன் தாத்பரியம். வானே - ஆகாசமும், மாநிலமே - மஹத்தான பூமியும், மற்றும் - மற்று மெவ்வகைப்பொருளும், முற்றும் - எல்லாப்பொருளும், என்னுளனவே - அவன் என்னுள் ஒடுங்க உண்மையில் எல்லாப் பொருளும் என்னுள் அடங்கின ஆயின. "மத்த ஸர்வ மஹா ஸர்வம் மயிஸர்வ ஸ்நாதகே ஸர்வகத்வாநந்த ஸியஸ ஏவாஹ மவஸ்தித:, என்ற கீதா சுலோகம் இவ்விடம் நினைக்கத்தக்கது.

3-ம் பாசுரம்

உள்ளனமற் றுளவாய்ப் புறமேசில
மாயஞ் சொல்லி
வள்ளல் மணிவண்ணனே யென்றென்றே
யுன்னையும் வஞ்சிக்குங்
கள்ளமனந் தவிர்ந்தேயுன்னைக் கண்டுகொண்
டுய்ந்தொ ழிந்தேன்
வெள்ளத் தணைகிடந்தா யினியுன்னை
விட்டென் கொள்வனே.

உரை:—உள்ளன மற்று உளவாய் - மனதானது இருக்கின்ற உலக விஷயத்திலேயே யகப்பட்டு அதிலேயே சஞ்சரித்து நிற்க, வள்ளல் - பிரபுவே, மணிவண்ணனே - அழகான மணிபோன்றவனே, என்றென்றே புறமே - என்று என்று வெளிக்கு மாத்திரம் வாயாலே, சில மாயம்சொல்லி - சிற்சில வாய்வார்த்தைகளால் இச்சகமாகப் பேசி, உன்னையும்-ஸர்வஞ்ஞரான உன்னையும், வஞ்சிக்கும் கள்ளமனம் - வஞ்சித்துவிடக்கூடிய குதிர்ஷ்டியுள்ள மனசானது, தவிர்ந்தே-பொய்நிவர்த்தியாய், உய்ந்து-உஜ்ஜீவித்து அதாவது நிர்வதிக உண்மையான பக்தியுக்தனுய், உன்னைக் கண்டுகொண்டு ஒழிந்தேன் - உன்னைக் கண்டுவிட்டேன், (நீயோ) வெள்ளத்து அணை-க்ஷீராப்தியில் தேவர்கள் மனுஷியர்கள்மற்ற லோகத்தார் எல்லாரையும் ரக்ஷிக்கும் நிமித்தம், கிடந்தாய்-சயனித்தாய், (அதாவதுகுழந்தையின்தொட்டிலருகுதாயார்இரக்ஷணுர்த்தம் படிப்பதுபோல்), இனி உன்னை விட்டு என்கொள்வேன் - நான் ஆத்மார்த்தமாக உன்னை யல்லது மற்ருெரு பிராப்பியம் வேண்டேன்.

4-ம் பாசுரம்

என்கொள்வ னுன்னைவிட் டென்றும்
வாசகங்கள் சொல்லியும்
வன்கள்வனேன் மனத்தை வலித்துக்
கண்ணநீர் கரந்து

நின்கண் ணெருங்கவைத்தே யெனதாவியை
நீக்க கில்லேன்
என்கண் மலினமறுத் தென்னைக்
கூவியருளாய் கண்ணே.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில், கள்ளமனமுடைய நான் உன்னைக் கண்டுகொண்டொழிந்தேன் என்று பாடியவர், இப்பாசுரத்தில், என்னுடைய மனமாசுகளே யறுத்து உன்னிடத்திலே ஆழ்ந்து ஊன்றி பக்தியுள்ளவனுக்கிக் கூவிக்கொள்ள வேணுமென்று ஏன் அபேக்ஷிக்கின்ருரென்ருல் - மனம் லௌகீக விஷயத்திலேயே தடுமாறிக்கிடப்பதாலும், மனதை இழுத்து விஷயங்களின் பற்றையறுத்துப் பகவான் பக்கல் நிலேநிறுத்துவது சுவய யத்தனத்தால் இயல்வதில்லே யாதலாலும் உன்னிடத்தே மனம் வீழ்ந்து, ஐயோ! ஆழ்ந்து முழுவதுஞ் சேரவில்லேயே யென்று என் கண்கள் அழாநின்றன. ஆன பின்பு நீயே உன்னுடைய நிரவதிக கிருபையாலே என்னை யிப்போது உன்னைவிட்டொழிந்த ஸர்வ விஷயங்களிலும் வைராக்கிய முண்டாக்கி, உன்னையே பற்றிக்கொண்டு கிடக்கும்படி செய்தருள்வாய் - எனக்குள்ள மீதி பிரதிபந்தங்களேயும் போக்கி உன் திருவடிகளில் என்னை வாங்கியருளாய்" என்கிருர்.

பதக் குறிப்புக்கள் :—வன் கள்வன் - அநாதியாக என் ஆத்மா உன்னுடையதென்று தெரியாமல் என் சொந்த உலகவிருத்தியில் அதை உபயோகித்தவன்-பகவானுக்கு ஏவல்செய்யவும் அவனது பிரயோஜனத்துக்காகவும் என் ஆத்மா உள்ளதென்றஞானமில்லாது போனவன், நின்னைவிட்டு - ஸ்வயம் ரஸயுக்தமான உன்னைவிட்டு, மனத்தை வலித்து - என் மனது உன்னைச் சார்ந்து சேரவில்லேயே என்று வியஸநப்படுகையால் சக்திகுன்றி ஒரு காரியத்துக்குமுதவாத கோழைபிடித்துப் போயதைத் தைரியப்படுத்தி அழுகையை விட்டு உலக வியாபாரத்தினின்றும், நீக்ககில்லேன் - நீக்குவதற்கு அசக்தனுனேன், என்கண் - என்னிடம்-மலினம் - மனமாசுகள். ஸகல காணங்களும்உன்னிடத்திலேயே ரமிக்கும்படி என்னைவிட்டு அகலவிடாமல் பாதுகாக்கவேணுமென்று இப்பாசுரத்தில் ஆழ்வார் அபேக்ஷிக்கிருர்.

5-ம் பாசுரம்

கண்ண பிரானை விண்ணோர்கரு
மாணிக்கத்தை யமுதை
நண்ணியும் நண்ணகில்லே னடுவேயோ
ருடம்பி லிட்டுத்
திண்ணமழுந்தக் கட்டிப் பல்செய்
வினைவன் கயிற்றுற்
புண்ணை மறையவரிந் தென்னைப்
போரவைத்தாய் புறமே.

பதக் குறிப்புக்கள்:—நண்ணியும் நண்ணகில்லேன் - உன்னை மனத்தால் கிட்டியும், நீ கிருஷ்ணுவதாரத்தில் ஸர்வ சுலபனுயிருந்ததைச் செவ்வனே அறிந்திருந்தும், உன்னுடைய கலவையை நான் இன்னம் அடையவில்லே. ஏனெனில், ஸம்ஸாரமாகிற அந்தகாரம் மூடுகிறது. புண்ணை-இங்கு மாம்சத்தாலானதேஹமென்பதை, மறைய-மனிதர் அறியாமலிருக்கும்படி, தோலால் மூடி போர - இப்படித் தேஹமாகக் கூட்டிவிடுவதால், புறமே வைத்தாயென்று சொல்ல என்ன தடை. திரும்பவும் திரும்பவும் ஸம்சரித்துத் தேஹம் எடுப்பதை நீக்கிக்கொள்ள நான் அசக்தனல்லவோ? நீ யதை அறியமாட்டாயோ?

பொழிப்புரை:—"ஸ்ரீவைகுண்ட நிலயனுய், ஐவர் மக்களுக்கு அதிபதியா யிருந்துவைத்து ஸர்வ போக்கியமாகும்படி வந்து வசுதேவ கிரஹத்தில் மனிதனுய் ஜநித்தும், உன்னைச் சுலபனென்று கண்டுவைத்தும், உன் திருவடிகளே அடையப் பெறுகிலேன். ஏன் தா னென்னில், நடுவே யோருடம்பிலிட்டுப் பலசெய்வினைக் கயிற்ருல் திண்ணமழுந்தக் கட்டிப் புண்ணை மறையவரிந்து என்னைப் போரவைத்தாய் புறமே, அதினுலே என்கிருர்"—ஆருயிரப்படி.

6-ம் பாசுரம்

புறமறக் கட்டிக்கொண் டிருவல்
வினையாற் குமைக்கு
முறைமுறை யாக்கை புகலொழிய
கண்டுகொண் டொழிந்தேன்
நிறமுடைநாற் றடந்தோள் செய்யவாய்
செய்ய தாமரைக்கண்
அறமுய லாழியங்கைக் கருமேனி
யம்மான் றன்னையே.

உரை:—இரு வல்வினையால் - புண்ணிய பாப ரூபமான நல்பிறப்பு தீப்பிறப்பு முதலாய பந்தங்களால், புறமறக்கட்டிக்கொண்டு-கொஞ்சங்கூடச்சந்தில்லாமல் தப்பவொண்ணு தொருபடி, குமைக்கும்-பின் ஜந்மங்களால் வருத்தும், முறைமுறை யாக்கைபுகல் - அந்தம் பூர்வ கர்மங்களுக்குத் தக்கபடி தேகங்கள் எடுத்து, ஒழிய-கழிக்க மனிதருக்குப்பிராப்தம், ஆனல் அடியேனுக்கோ,—நிறமுடைய - ஸௌந்தரிய யுக்தமான, நாலுதடந்தோள் - நாலு பெரிய புஜங்களேயும், செய்யவாய் - சிவந்த வாயையும், செய்ய தாமரைக்கண் - அருணலோசன திருக்கண்களேயு முடையனுகி, அறம் - தர்மத்தையே எப்பொழுதும் செய்ய முயல்கின்ற, ஆழி அங்கை - திருக்கையில் சக்கராயுதத்தைத் தரித்திருக்கும், கருமேனி அம்மானை - நீல வர்ணமுள்ள பகவானை, கண்டுகொண்டு-பிரத்திக்ஷித்தாற்போல எனக்குத் தர்ச்சனம்தர நானதைக் கண்களால் பார்ப்பதுபோல் கண்டு, ஒழிந்தேன் - சம்சரித்துப் பல பிறப்புக்கள் பிறந்துபடும் சம்சாரிகளின் துக்கத்தி லகப்படாதே அவனது இனிய கிருபையால் நீங்கிவிட்டேன்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலே ரூ. 1—4—0

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[376-வது பக்கத் தொடர்ச்சி]

பர்டினண்ட்:—இன்னிசைகள் இவை பணிசெய்யும் அணங்குதான் இவள், நிச்சயம் நிச்சயம்! (1). இத்தீவினில் தங்குகின்றனையோ நீ என அறியவேண்டுகின்றேன், இயம்பியருள்வாய். மற்றும், எங்ஙனம் யானிங்கு ஒழுகலாமென்பதையும் நீ நல்லறிவுறுத்தவேண்டும் (2). என் முதல்வேண்டுகோள், இறுதியிலதனைக் கேட்கின்றேனாயினும், ஓ விந்தையே! நீயோர் வனிதையோ அல்லையோ? (3).

மிராண்டா:—விந்தையோ இல்லை ஐயா, மற்றொரு வனிதை நானே (4).

பர்டினண்ட்:—என்மொழியே! அட கடவுளே! (5). இது பேசப்படுமிடத்தில் மாத்திரம் இருந்தேனாயின் இம்மொழியைப் பேசுகின்றவர்களுள் தலைவன் நான் (6).

ப்ராஸ்ப்பீரோ:—எப்படி! எப்படி தலைவன்! உன் சொல் இதனை நேப்ல்ஸ் அரசன் கேட்பானாயின் யாவதாவாய் நீ? (7).

பர்டினண்ட்:-யான் இப்பொழு திருக்கும்வண்ணம், நேப்ல்ஸைப் பற்றி நீ பேசக் கேட்டு இறும்பூதெய்துகின்ற வொருதமியேன் (8).என்னுரையை இப்பொழுது அவன் கேட்கின்றான் (9). அவன் கேட்கலாயிற்றே என்றே கலுழ்கின்றேன் (10). இக் கண்களால், மன்னவன் என் தந்தை உடையக் கண்ட நானே நேப்ல்ஸ் (11).

மிராண்டா:—ஐயோ, பாவமே!

பர்டினண்ட்:—ஆம், உண்மை, அவனுட னிருந்த பிரபுக்கள் அனைவரும் முழுகினர். மிலான் மன்னனும் அவன் வீரமைந்தனும் இருவர் (12,.

ப்ராஸ்ப்பீரோ:—(ஒருபுறமாய்) இப்பொழுது செய்யத்தகுமாயின், மிலான் மன்னனும், வீரத்தில் விஞ்சிய அவன் புதல்வியும் உன்னை அடக்கிவிடக் கூடும் (13)—முதற் பார்வையிலேயே இவர்கள் கண்களை மாற்றிக்கொண்டுவிட்டனர்—நுண்ணிய வென் ஏரியல், இதற்காக யானுன்னை விடுதலை செய்வேன்! [பர்டினண்டைப் பார்த்து] ஒரு வார்த்தை நல்லவென் ஐயா, நினக்கே ஏதோ பிழை நீ இழைத்துக்கொண்டிருக்கின்றாய் என எண்ணுகின்றேன்: ஒரு வார்த்தை (13).

மிராண்டா:—எற்றுக்கோ என் தந்தை இப்படி நயமின்றிப் பேசுகின்றார் (14). யான் இதுகாறும் பார்த்திருப்பவர்களில் மூன்றாவது மனிதனாவான் இவன். எய்துதற்கு யான் நெட்டுயிர்ப்பு வீங்கிய முதல்வன் இவனே. என்வழிச் சாய்வதற்கு என் தந்தையைக் கருணைதான் வந்து அரைக்கவேண்டுமே! (15).

பர்டினண்ட்:—ஓ, கன்னியேயாயின், உனதாசை வேறே நாடிச்சென் றிலதாயின், உன்னை யான் நேப்ல்ஸிற்கு அரசியாக்குவேன் (16).

வியந்து நிற்கும் மிராண்டாவிற் கருகு பர்டினண்டும் வந்துசேர்ந்தான்.

(1) இது பர்டினண்ட் தனக்குள் சொல்லிக்கொண்டது. இனிவருவன இவன் மிராண்டாவைப் பார்த்துக் கேட்பவை.

(2) இந்தத் தீவினில் நான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென்பதைப் பற்றி நீ எனக்குச் சொல்லித்தர வேண்டும்—என்பது பொருள்.

(3) நீ யோர் தெய்வமோ அல்லது மானுடமகளோ—என்று கேட்கின்றான். "அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை, மாதர்கொல் மாலுமென் னெஞ்சு" என்ற சிந்தனைக்கு இக்கேள்வி இணங்கியிருக்கும் பான்மை நினைவிற் கொள்ளத்தக்கது.

(4) விந்தையே, என்று பர்டினண்ட் வியந்து கூறினனென்பதுணராமல் தன்னைத்தான் அவ்வாறு அழைத்தான் என மதித்த பேதை மிராண்டா, "நான் விந்தை அல்லள்" என மறுத்துக் கூறுகின்றாள்.

(5) நேப்ல்ஸ் தேசத்துப் பாஷையை மிராண்டா பேசுவது கேட்டுப் பர்டினண்ட் அளப்பரிய ஆச்சரிய மடைகின்றான்.

(6) இம்மொழி பேசப்படும் இடம்—நேப்ல்ஸ், இம்மொழி பேசுகின்றவர்களுக்கு நான் தலைவனாயிருக்கின்றேன்—என்பது பொருள்- தலைவன்—சிறந்தவன்—அரசன்.

(7) ஒரு மொழியைப் பேசுபவர்களில் முதன்மையாயிருப்பவன், அவர்களது அரசன். ஆதலால், உன்னை நீ எப்படி முதன்மையோன் என்று சொல்லிக்கொள்ளலாம்? நேப்ல்ஸ் அரசன் வேறு ஒருவன் இருக்கின்றானே. இப்பொழுது நீ சொல்வதை அவன் கேட்பானாயின், உன்னைத் தண்டிக்கமாட்டானோ?—என்பது பொருள்.

(8) இறும்பூது—ஆச்சரியம். தமியேன்—என்பது, தனியாயிருக்கின்றேன், எளியனாயிருக்கிறேன், என்னும் இரண்டு பொருள்களையும் ஏற்று நிற்கின்றது. "யான் இப்பொழுது இருக்கும்வண்ணம் யாதெனில்......ஒரு தமியேன் ஆக இருப்பதே" என்று வாக்கியத்தை முடித்துக்கொள்க. தன் தந்தையாகிய நேப்ல்ஸ் வேந்தன் இறந்துபட்டானென்று பர்டினண்ட் கருதியிருப்பதால், தந்தைக்குப்பின் அரசு தனதாக, "நேப்ல்ஸ் வேந்தனும் நானும் இப்பொழுது ஒருவரே ஆகிவிட்டோம்" என்ற குறிப்புடன், அதனால், தந்தையை இழந்த எளியனும் ஆயினேன்" என்ற பொருளும் தோன்றும்படி, "ஒரு தமியேன்" என்கின்றான்.

(9) அவன்—நேப்ல்ஸ் அரசன். தானே அவ்வரசன் என்று கருதி யிருப்பதால், "நான் சொல்வதை நேப்ல்ஸ் அரசன் கேட்கின்றான்—என்கின்றான்.

(10) நான் நேப்ல்ஸ் அரசனாகும்படி நேர்ந்ததற்கு மிகவும் வருந்துகின்றேன்—என்பது பொருள்.

(11) நானே நேப்ல்ஸ்—நானே நேப்ல்ஸ் அரசனாக இருக்கின்றேன்—என்பது பொருள்.

(12) கப்பல் உடைந்து முழுகினவர்களில் இருவர். மிலான் மன்னன்—என்று பர்டினண்ட், ப்ராஸ்ப்பீரோவின் தம்பியாகிய அண்ட்டோனியோவைக் குறிக்கின்றான்.

(13) நானே நேப்ல்ஸ், என்று பர்டினண்ட் உரைத்ததற்கு எதிர்மொழி இது. "நீ நேப்ல்ஸ் மன்னன் அல்லன், அவ்வாறு நீ எண்ணிக் கொள்வதில் ஏதோ பிழையிருக்கின்றது. தனியே வா, உன்னுடன் ஒரு வார்த்தை சொல்லவேண்டும்—என்பது பொருள்.

(14) ப்ராஸ்ப்பீரோவின் குரலில் சிறிது கடுமை தோன்றியதுபோலும். ஆதலின் மிராண்டா இவ்வண்ணம் இரங்குகின்றாள்.

(15) கருணைகொண்டு என் தந்தை இவனை, என் மனதிற்கிணங்கி, ஏற்றுக்கொள்ள இசையலாகாதா—என்பது பொருள்.

(16) மிராண்டா சொன்னது பர்டினண்டின் காதிற் பட்டதுபோலும். நீ கலியாணம் ஆகாதவளாயும், வேறொருவரையும் காதலித்தில்லாதவளாயும் இருப்பாயாயின், உன்னை, மணந்து நான் நேப்ல்ஸிற்கு அரசியாக்குவேன்—என்பது பொருள்.

ப்ராஸ்ப்பீரோ:—மெல்ல, ஐயா, மெல்ல! இன்னொரு வார்த்தை—[ஒருபுறமாய்] இவரிருவரும் ஒருவர் ஆட்சியி லொருவ ரிருக்கின்றார். மிகமிக எளிதில் வென்றுகொள்ளல் பரிசிலை எளியதாக்கும்; ஆதலின், வேகமுடைய இக்காரியத்தை நான் கடினமாகச் செய்தல்வேண்டும் (17). [பர்டினண்டைப் பார்த்து] எனக்கு நீ அடங்கவேண்டுமென்பது இப்பொழுதென் கட்டளை: உனக்கு உரியதல்லாவொரு பெயரை நீ அபகரித்துக்கொள்கின்றாய் (18). இத்தீவினிற்கு உடையவனாகிய என்னிடத்திலிருந்து இதனைக் கவர்ந்துகொள்வதற்கே ஒற்றனாக இங்கு நீ உன்னைக் கொணர்ந்துவைத்திருக்கின்றாய்.

பர்டினண்ட்:—ஆண்மகன் நான், அது அல்லேன்.

மிராண்டா:—இத்தகையவோர் கோயிலில் தீயதொன்றும் வசித்தற்கியலாது (19), தீயன என்பவைகளுக்கு இவ்வளவு அழகிய வீடொன் றிருக்குமாயின் நல்லனவும் அதனுடன் வசிக்கமுயலும்.

(17) இவ்வளவு சுலபமாய் இவன் மிராண்டாவை அடைந்துவிட்டானாயின், அவளது அருமையை நேராக மதிக்கமாட்டான். வருத்தப்படாமல் பெற்ற இலாபத்தின் அருமை ஜனங்களுக்குத் தெரிவதில்லை. ஆகையால், அதிக வேகமாய் நடக்கின்ற இக்காதலுக்கு நான் சிறிது இடையூறு செய்வதே தக்கது—என்பது பொருள். பரிசில் - வெகுமதி; வென்றுகொள்ளல் - கெலித்தல்.

(18) உரியதல்லாப் பெயர் - நேப்ல்ஸ் அரசன் என்று சொல்லிக்கொள்வது

(19) கோயில், என்றது பர்டினண்டின் வடிவத்தை. இவ்வளவு அழகிய உருவமுடையவன் வஞ்சனையால் இத்தீவைக் கவர நினைக்கமாட்டான். நல்லவை அவனுள்ளத்தில் தங்கியிருக்கும் என நினைத்தலேநேர்,—என்பது பொருள்.

திருக்குறள் நீதி

காமத்துப்பால்— கற்பியல்

[316-வது பக்கத் தொடர்ச்சி]

1. பிரிவாற்றுமை

தோழி—தலைமகள்

1. பிரியாமை யுண்டேற்பேசும்
பிரிந்துவரா முன்னிறப்பாள்.
2. காதலர்க்கென் மேலாசை
கசந்தபிரி வஞ்சுகின்றேன்.
3. பிரியவிழை பவர்க்கும்
பேதையென்மேற் காதலுண்டோ.
4. அஞ்சலென்றார் விட்டேகின்
அடியாட்குந் தோஷமுண்டோ.
5. பிரியாவகை செய்யாயேற்
போமெனுயிர் தோழியரே.
6. வன்கண்ண ராய்ப்பிரிவார்
பின்வந்து கூடுவரோ.
7. பிரிவுரைக்க நீவருமுன்
பேசிற்றென் கைவளைகள்.
8. பாங்கியற்ற வாழ்விலுமென்
பதிபிரிவ தேகொடிது.
9. தொடிற்சுடுந்தீ காமம்போல்
விடிற்சுடுவ தில்லையடி.
10. பிரிவின்கண் வருந்திநொந்தும்
பிழைத்துவாழ் வாருமுண்டு.

---

2. படர்மெலிந் திரங்கல்

தலைமகள்—தோழி

1. இறைத்தூறு மூற்றுப்போல்
மறைக்கின்மிகுங் காமமடி.
2. மறைத்துமயல் தீராதவர்க்
குரைத்தாலும் நாணமடி.
3. நாணாசை இருபுறத்தும்
வீணாக வருத்துதடி.
4. காமக்கடல் கடக்கும்
ஏமப்புணை யறியேனடி.
5. நட்பில் வருத்துமவர்
துப்பிலென்ன செய்யாரோ.
6. புணர்ச்சி தருஞ்சுகத்தில்
உணர்ச்சிபிரி வாற்றல்துன்பம்.
7. காமத்துறை காணுதேன்
காலத்துறை காணேனே.
8. ஊர்துயிலச் செய்யிரவுக்
கோர்துணைநா னல்லதில்லை.
9. கொடியார் கொடுமையினுங்
கொடிதேயின் னீளிரவு.
10. காதலரைத் தேடியவென்
கண்வருந்தி வாடுதடி.

---

3. கண்விதுப்பழிதல்

தலைமகள்—தோழி

1. யாங்காட்டக் கண்டவரைத்
தாங்காணக் கேட்குமடி.
2. ஆயாது நோக்கியகண்
ஓயா தழுவானேன்.
3. விரைந்தவரை நோக்கிபகண்
இருந்தின்றைக் கழுவானேன்.
4. தீராநோய் தந்தகண்கள்
நீர்வற்றி நிற்குமடி.
5. துயர்க்கடலில் விட்டகண்கள்
தூங்கா திருக்குமடி.
6. எனைக்கெடுத்த கண்டுயிலா
திருந்தழுதல் நீதியடி.
7. அன்றாசைப் பட்டகண்கள்
இன்றழுது வற்றுமடி.
8. பேணாது பெட்டாரைக்
காணா வருத்தமடி.
9. வந்தாற் பிரிவஞ்சி
வாராவிடினுங் கண்ணுறங்கேன்.
10. உள்ளமறை ஊரவர்க்கென்
கண்கள்பறை சாற்றுமடி.

4. பசப்புறு பருவரல்

தலைமகள்—தோழி

1. பிரிந்தார்க் கிணங்கியவென்
பசப்பினையார்க் குரைப்பேன்.
2. உரிமையுணர்ந் தோபசப்பு
ஊருதே தேகமெங்கும்.
3. காமம் பசலைதந்து
கைக்கொண்டார் நாணுடைமெழில்.
4. சொல்நினைந்துங் குணமுரைத்துந்
தேமல்தந்தார் வஞ்சனையே.
5. பத்தா பிரிந்ததுவும்
பசப்பூர்ந்த தென்மேனி.
6. விளக்கின் மெலிவிருட்போல்
முயக்கின்மெலி பசப்பாமே.
7. புல்லிச் சிறிதகன்றேன்
பொல்லாப் பசப்படைந்தேன்.
8. பசந்தபழி கூறுபவர்
பிரிந்தார்மேற் காணார்பழி.
9. நல்லா ரெனிலன்பர்
நன்றே பசலைநிறம்.
10. பிணக்குநட்டார் போற்றினரேல்
பசப்பியென்ற பேரினிதே.

---

5. தனிப்படர் மிகுதி

தலைமகள்

1. காதலிரு காதலர்க்குங்
கருத்தொப்ப தேயின்பம்.
2. வாழ்வார்க்கு வானம்போல்
வீழ்வார்க்குக் காதலனே.
3. பிரிவிடத்தும் வாழ்வோம்
வருவா ரெனும்நினைவால்.
4. கணவர்விருப் பாற்றுக்காற்
கற்புடையாட் கென்சிறப்பு.
5. காதலியைக் காதலியாக்
காதலனு லென்னநலம்.
6. காவடியின் பாரமொத்த
காதலது நனியினிது.
7. காமனறி யான்போலுமென்
காதலரைத் துன்புறுத்த.
8. வீழ்வாரி னின்சொலின்றி
வாழ்வாரெனைப் போலுமுண்டோ
9. அற்றதவ ரன்பெனினும்
பெற்றுலொரு சொற்போதும்.
10. உதவாதார்க் குரைத்தநெஞ்சே
ஊடறுப்பா யாசைவெள்ளம்.

6. நினைந்தவர் புலம்பல்

தலைமகள்—தோழி

1. கள்ளிலினி தேகாமம்
உள்ளினொரு நாட்புணர்ச்சி.
2. பிரிந்துள்ளும் போதுமின்பம்
பிறிதிலிலை காமம்போல்.
3. நம்மைநினைக் கின்றுரோடி
தம்மல்வந்துந் தும்மவில்லை.
4. என்னெஞ்சத் தவரிருக்க
அவர்நெஞ்சம் யானுளனோ.
5. என்மீது காதலற்று
ரீந்துவக்கு மின்பமென்ன.
6. இருவர்மன மொன்றுபடின்
பெருமையாங் காமவின்பம்.
7. மறப்பறியேன் முன்னிலை
மறந்திருந்தும் வாழ்வேனோ.
8. நினைத்தபிழை பொறுத்தருளும்
நெஞ்சத்தி லன்பாமடி.
9. அருளில்லாத் துன்பமன்றிப்
பிரிவினால் யான்வருந்தேன்.
10. கண்ணினுற் காதலனைக்
காணவெறி தண்ணிலவே.

---

7. கனவுநிலையுரைத்தல்

தலைமகள்

1. காதலர்தூ தோடுவந்த
கனவிற்கென் கொல்விருந்து.
2. கனவில்வருங் காதலர்க்கென்
கருத்தை விரித்துரைப்பேன்.
3. நனவில்நல்காக் காதலரைக்
கனவிற்கண்டு வாழ்வேனடி.
4. நனவிலுத வாரெனினுங்
கனவிலெனக் கின்பமடி.
5. நனவிடத்துக் கண்டவின்பம்
கனவிடத்து மேயினிது.
6. நனவெனவொன் றில்லையெனில்
கனவிலெனை நீங்காரடி.
7. நனவிற்கூ டாக்கொடியார்
கனவிடத்தே னிக்கொடுமை.
8. துஞ்சினுற் றோண்மேலும்
நெஞ்சில்மறை வார்விழிப்பின்.
9. கனவிடத்துக் காதலரைக்
காணுதார்க் கென்னநலம்.
10. கனவிடத்தும் நீங்கார்தாம்
மனநொந்து போனவரோ.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :		தைலங்கள்:	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனுதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ,,	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ,,	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸுதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸ்பெ. மெடிகேட்டட் டப்பி. தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக்
மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெய்
ஜவரேக்
[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள்ள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இளைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்திபாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறுத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறுத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி

(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 Postage extra.

KALANILAYAM

Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி

நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ருபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்றுறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணா **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

மாதர்கள் அழுதால் அதனால் அவர்களது நரம்புகள் உறுதியுறுகின்றன என்று மேனாட்டு வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனராம்.

***

டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான சுமத்ராதீவில் ஒரு புஷ்பம் இருக்கின்றதாம். அப்புஷ்பம் நன்றாக மலர்ந்திருக்கும்போது அதன் உயரம் 8 அடி இருக்குமாம். பார்வைக்கு அழகும் நல்ல மணமும் உடையதாம் அப்புஷ்பம்; உலகத்தில் எங்கும் அவ்வளவு பெரிய மலர்கள் இலவாம்.

***

பிரான்ஸ் தேசத்துச் சர்வகலா சாலையினர் மாணவர்களை ஆகாயவிமானத்தில் ஏற்றிச்சென்று பூகோள சாஸ்திரம் கற்பிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வங்காளத்தில் 1932-வது வருஷத்தில் 800 விதவா விவாகங்கள் நடந்துள என்று விதவா விவாகச் சபையினர் அறிவிக்கின்றனர்.

***

இந்திய மக்கள்:—சமீபத்தில் இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்த மார்கரெட் ஸ்பிகல் என்னும் ஜெர்மனிய மாது பின்வருமாறு எழுதுகின்றார்—

நான் உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளேன். எந் நாட்டு மக்களும் இந்தியர்களாகார். எனக்கு இந்தியர் செய்த உபசாரம் சிறியதன்று. இந்தியர்கள் கபட மில்லாமல் வார்த்தையாடுகின்றனர். ஆடம்பரம் என்பதே அவர்களிடம் இல்லை. ஐரோப்பாவில் ஓரிடத்தில் தங்கினால் சாப்பாட்டிற்கும் படுக்கைக்கும் பணம் கொடுக்க வேண்டும். இந்தியாவில் அவ்வழக்கமில்லை. இந்தியாவில் சிற்சில விடங்களில் நான் பணம் கொடுக்க விரும்பியபொழுது அவர்கள் அதை விரும்பவில்லை.

இந்தியருடைய குடும்பவாழ்க்கை மிகச் சிறந்தது. குடும்பக் கலகங்கள் இல்லை. புருஷன் மனைவி என்னும் இருவருக்குள்ளும் பூசல்கள் இல்லை. எல்லோரும் திருப்தியாயிருக்கின்றனர். அன்னதற்குக்காரணம் அங்கு கையாளப்பெறும் மணமுறையேயாகும்.

ஐரோப்பாவிலோ மாந்தரிடத்தில் அமைதியில்லை. அவர்களுக்கு வாழ்க்கையில் திருப்தியில்லை. இவ் விஷயத்தில் ஐரோப்பியர் இந்தியாவைப் பின் பற்றித் தமது சமுகவாழ்வையும், குடும்ப வாழ்வையும் திருத்தி யமைத்துக்கொள்ளவேண்டும்.

***

சாலமன் தீவு என்னும் ஒரு தீவினில் வசிப்பவர்களின் பழக்கவழக்கங்கள் புதுமையானவாம். அங்குப் பொருள் தேடும் தொழிலைப் பெண்கள் மேற்கொண்டிருக்கின்றனராம். ஆடவர்கள் தங்களை அலங்கரித்துக்கொண்டு வீட்டிலிருப்பார்களாம். பெண்கள் ஆபரணங்கள் அணிவதில்லையாம்.

***

இலங்கையில் வேலையில்லாமற் கஷ்டப்படு[illegible] கத்தார் ஒரு விவசாயப் பண்ணையை ஏற்படுத்த யோசனை செய்திருக்கின்றார்கள். அநுராதபுரம் என்னும் மலைப்பிரதேசத்தில் உள்ள நிலப்பரப்பைப் பண் செய்து வயல்களாக வகுத்து, வேலையில்லாதாருக்கு அளித்து, விவசாயம் செய்வதற்கு வேண்டிய பொருளும் அளிப்பார்களாம். இந்த ஏற்பாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தார் ஒன்றரை லட்ச ரூபாயை ஒதுக்கி வைத்திருக்கின்றார்களாம். இதனால் பலருக்கு வேலையும் விவசாய அபிவிருத்தியும் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

***

உலகத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளில் மிகவும் ஆழமானது அமெரிக்கா கலிபோர்னியா என்னுமிடத்திலுள்ள ஒரு எண்ணெய்க் கிணறு என்று தெரிகின்றது.

***

பாரிசில் பேசுங் கடிகாரங்கள் கண்டுபிடிக்கப் பெற்றிருக்கின்றனவாம். நாம் மணி அறியவிரும்பினால் அக்கடியாரங்கள் இவ்வளவு மணி இவ்வளவு நிமிஷம் இவ்வளவு செக்கண்டு என்று சொல்லிவிடுமாம்.

***

ஓர் அமெரிக்க அறிஞர் பின் வருமாறு அறிவிக்கின்றார்:—சிவப்பும் மஞ்சளும் கலந்த வெளிச்சத்தை விரும்புகின்றவர்கள் கல்வியில் நாட்டமுள்ளவர்களாகவும் சாதுக்களாகவும் இருப்பர். செந்தாமரை நிறம் போன்ற நிறத்தில் விருப்பமுடையவர்கள் பொறாமை பேராசைக் குணங்களுடையவராயிருப்பார்கள். வெளுத்த மஞ்சள் நிறத்தை விரும்புபவர்கள் சாமர்த்திய சாலிகளாயிருப்பர். எனினும், அற்ப விஷயங்களில் அவர்கள் மனம் செல்லும். பெருந்தன்மை அவர்களிடம் இராது.

***

மாமிச உணவை விலக்கி மரக்கறி உணவை ஏற்றும், தேகாப்பியாசம் செய்துகொண்டும், பொறாமையும் ஆசையும் இல்லாமலும், கோபத்தின் வசமாகாமலும் லாகிரி வஸ்துக்களை விலக்கியும், மிதமிஞ்சிய போகாதிகளில் ஈடுபடாமலும் முறையே இல் வாழ்பவன் 180 வயது வாழலாம் என்று ஒரு ருஷிய சாஸ்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனராம்.

***

திருவிதாங்கோட்டு அன்னை மஹாராணியார்:—ஸ்ரீ ஸேது பார்வதிபாய் மஹாராணியாகிய இவ்வம்மையார்தம் சரித்திரத்தை, அவ ரங்கங்கு, மாதர் கல்வி ஒழுக்கம் முதலியவைகளைப்பற்றி நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளின் நேரிய மொழிபெயர்ப்புடன், ஸ்ரீமான் T. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் M.A. நல்லதமிழ் நடையில் எழுதிப் பிரசுரஞ் செய்துள்ள [illegible] எமக்கு அனுப்பப் பெற்றிருக்கின்[illegible] கிடைக்குமிடம், R. [illegible]

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்வலல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அசத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணு 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்த்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ...	... Rs. 1,55,66,720
Out of a business of	... Rs. 1,96,70,000 received in proposals.
Life Assurance is security	for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.
Claims paid over	... Rs. 1,00,00,000
Total Assets exceed	... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)